திருநெல்லை

ஆன்மீகத் திங்களிதழ்

குரோதி - மாசி - 2025 - மார்ச் | இணைய வழி - மலர் - 2 - இதழ் - 7

ரங்பரி ஏகாதசி அன்று அருள்மிகு விசுவநாதரையும் அருள்மிகு பார்வதி அம்மனையும் அலங்கரித்து பல்லக்கில் அழைத்து வரும் காட்சி

திருநெல்லை

இணைய வழி ஆன்மீகத் திங்களிதழ்

குரோதி – மாசி

2025– மார்ச்

இணையவழி மலர் 2 – இதழ் 7

(தனிச் சுற்றுக்கு மட்டும்)

சிறப்பாசிரியர்

பொற்கிழிக் கவிஞர்

சொ.சொ.மீ. சுந்தரம்

ஆலோசகர்

தமிழாகரர் தெ. முருகசாமி

ஆசிரியர் குழு

வெளியிடுபவர்

சீர் வளர் சீர்

நாராயண ஞான தேசிக சுவாமிகள்

கோவிலூர் மடாலயம்

கோவிலூர் 630 307

மானகிரி (அஞ்சல்)

(வழி) காரைக்குடி

சிவகங்கை மாவட்டம்

04565–236846

94433 37011

இணைய அச்சாக்கம்

தீபா ராஜேஸ்வரி

கோவிலூர்

பொருளடக்கம்

பக்கம்

1. ஆசியுரை.. 10
2. கோவிலூர் ஆண்டவர் திவ்ய வரலாறு 11
3. சமய எழுச்சியால் சமூக மறுமலர்ச்சி காட்டிய அப்பர்...................................... 15
4. பண்டெழுவர் தவத்துறை......................... 22
5. திருவிளையாடற் புராணம் தொடர்............ 28
6. கோவிலூர் புதையல்கள்.......................... 34
7. காரைக்காலம்மையாரின் அற்புதத் திருவந்தாதி பாடல் நலம்........................ 36
8. ஆத்ம சமர்ப்பணம் செய்து ஈசனை அடைந்த நந்தனார் 43
9. சிவாலயங்களின் சிறப்புகள்..................... 47
10. திவ்ய தேச கவிதை தரிசனம்................ 51
11. பெரியபுராண கதை களம்....................... 58
12. தென்சபாநாயகர் கோவில் தரிசனம்........ 59
13. ஒலிப்பேழை.. 60
14. பயிற்சிப்பேழை.. 61
15. கோவிலூர் ஆண்டவர் நூலகம்............... 62
16. முந்தைய இதழ்கள்................................ 64

ஆசியுரை

சீர் வளர் சீர்

நாராயண ஞான தேசிக சுவாமிகள்

கோவிலூர் ஆதினகர்த்தர்

அனைவருக்கும் எமது நல்லாசிகள். சென்ற இதழில் இடம்பெற்ற ஆசியுரை குறித்துப் பலரும் நற்கருத்துகளை வழங்கினீர்கள், மகிழ்ச்சி. சொல்லாலும், செயலாலும், ஒற்றுமையாலும் இன்னும் அடைய வேண்டிய பணிகள் ஏராளம். அந்தப் பணிகளுக்கு நம்மை ஆட்படுத்திக் கொள்ள இந்த ஆசியுரை உதவுகின்றது.

ரங்பரி ஏகாதசி காலத்தில் புகுந்த வீடு வரும் பெருமாட்டி

காசி புண்ணிய பூமியில் ஒவ்வொரு நாளும் அற்புதநாளே. ரங்பரி ஏகாதசி என்ற திருவிழா நாளும் ஓர் அற்புத நாள். காசியில் நடைபெறும் வண்ணத்திருவிழா இதுவாகும். நமக்குப் பழக்கமான மொழியில் சொல்வதானால் ஹோலிப் பண்டிகை இதுவாகும். காசியில் இரு ஹோலிப் பண்டிகைகள் கொண்டாடப் படுகின்றன. அதில் ஒன்று ரங்பரி ஏகாதசி அன்று நடைபெறும் ஹோலி மற்றொன்று அதனைத் தொடர்ந்து அடுத்த நாள் நடைபெறும் மாசன் ஹோலி.

இம்முறை காசியில் நடைபெற்ற ரங்பரி ஏகாதசி வண்ண ஹோலி விழாவில் கலந்து கொள்ளும் மகிழ்ச்சியான வாய்ப்பு கிடைத்தது. எம்பெருமான் சிவபெருமானும் பார்வதிதேவியும் திருமணம் புரிந்த

எழுந்தருளச் செய்யப் பெற்று அங்குக் காசி வி சு வ நா த ரு க் கு ச் சிறப்பு பூசனைகள் நடைபெறுகின்றன.

இ வ் வி ழா வி ல் மகிழ்வுடன் கலந்து கொள்ள இறையருள் கூட்டுவித்தது.

நிலையில் பார்வதி தேவி முதன் முதலாகப் பிறந்தவீடு விட்டு, புகுந்த வீடு புகும் நாள் இதுவாகும். இந்நாளை வண்ணப்பொடிகள் தூவி மக்கள் கொண்டாடுகின்றனர். காலையில் கங்கையில் நீராடி அருள்தரு விசுவநாதரைத் தரிசித்து, வண்ணப்பொடிகளை அவர்மீது தூவி தமது மகிழ்ச்சியைத் தெரிவிக்கின்றனர்.

திருக்கோயிலின் வளாகத்தில் எம்பிரானும் பிராட்டியும் அழகாக அலங்காரம் செய்யப்பட்டுப் பல்லங்கில் அழைத்து வரப்பெறுகின்றனர். அப்போது பல்வகை இசைக் கருவிகளை முழங்கியபடி மக்கள் ஆடுகின்றனர். பாடுகின்றனர். மேலும் பெருமான் மீதும், பெருமாட்டி மீதும் வண்ணப்பொடிகளைத் தூவி வ ண் ண ம ய மா க் கு கி ன் ற ன ர். இதன்பின் இருவரும் கருவறையில்

காசி, காசி, காசி

காசியில் கங்கை நீராடல், விசுவநாதர் தரிசனம், பித்ரு கடன் இவற்றைச் செய்வதின் தொடர்ச்சியாக தானங்களைச் செய்து மக்கள் பிறவிப் பயன் அடைகின்றனர். காசியில் ஏதேனும் ஒரு தானத்தை ஒரு முறை செய்தால்

நூறு தானங்களை நூறு முறை செய்த பலன் கிடைக்கும் என்று காசிக் காண்டம் குறிப்பிடுகிறது.

இலகுசுடர் விச்சுவநாதற்கு இணையாம் கடவுள் இலிங்கம் நீர்

சுலவு மணிகன்னிகைக்கு இணையாம் துகடீர் தெய்வதீர்த்தமும்வான்

கலவ மஞ்ஞை நடம் பயிலும் காசிக்கு இணையாம் நன்னகரும்

உலகம் ஒரு மூன்றினும் இலை ஈது உண்மை உண்மை உண்மையால்

என்று காசிக் காண்டத்தில் அதிவீரராம பாண்டியர் காசி நகரின் பெருமையை எடுத்துரைக்கிறார்.

காசி விசுவநாதருக்கு இணை எத்தெய்வமும் இல்லை. நீர் திகழும் மணிகன்னிகைக்கு இணையாகச் சொல்லக் கூடியதும் எதுவும் இல்லை. காசிக்கு இணையான நகர் உலகம் மூன்றிலும் இல்லை. இது உண்மை, உண்மை. உண்மை என்று மும்முறை உறுதி செய்து காசியின் பெருமையை அறிவிக்கிறார் அதிவீரராம பாண்டியர். காசி நகரம் புண்ணிய நகரம். அங்கு வாழ்வோர் புண்ணியம் செய்தவர்கள். அங்குத் தரிசிப்போர் புண்ணியம் அடைகிறார்கள். காசி என்று சொன்னாலும் எண்ணினாலும் வழிபட்டாலும் முக்தியை அடைய இயலும்.

இத்தகைய பெருமை மிக்க காசியில் தானம் செய்வது என்பது அனைவருக்கும் வாய்க்காது. அதிலும் குறிப்பாக காசி விசுவநாதர் ஆலயத்தின் வழியாக அன்னதான அறத்தைச் செய்வது என்பது இன்னும் பெருமைக்கும் ,அருமைக்கும் உரிய செயல்.

அன்ன தான அறம் செய்வதால் புண்ணியம் பெருகும். பாவம் போகும்.

அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்

பொன்னம் பாலிக்கும்; மேலும், இப் பூமிசை

என் அன்பு ஆலிக்கும் ஆறு கண்டு, இன்பு உற

இன்னம் பாலிக்குமோ, இப் பிறவியே

என்று பாடுகிறார் திருநாவுக்கரசர். அன்னம் பாலிப்பால் உலகில் அன்பு பெருகும், பொன் பொருள் பெருகும். பிறவி தொடராது என்று இந்தத் தேவாரம் பொருள் தருகிறது.

பொருளானாம் எல்லாமென்று ஈயாது இவறும்

மருளானாம் மாணாப் பிறப்பு.

என்கிறது தமிழ்மறைதிருக்குறள். இந்த உலகின் இயக்கமே பொருளால் நடைபெறுகிறது என்பதை அறிந்த மனிதன் மற்றவர்களுக்கு ஒன்று ஈயாமல் வாழும் வாழ்வால் பிறவிகள் தொடர்ந்து கொண்டே இருக்கும் என்கிறார் வள்ளுவர்.

அறம் செய விரும்பு என்கிற தொடர் நமது வாழ்வின் தொடக்கத் தொடராகவே அமைகின்றது.

மற்றவர்களுக்குக் கொடுக்க மனம் வேண்டும். இதனால் பொருள் தேய்வு ஏற்படப் போவதில்லை. மற்றவர்களின் வயிற்றுக்கு ஒன்று ஈவதே பெரும் கொடையாகும். இதனைச் செய்ய மனம் விரும்ப வேண்டும்.

முற்பிறவிகளில் பல நன்மை செய்தவர்களால் மட்டுமே காசியை அடைய இயலும். காசியில் அறம் செய்வதற்கு முற்பிறவியில் பற்பல நன்மைகள் செய்திருக்க வேண்டும். அவர்களால் மட்டுமே காசியில் நல்லறங்கள் செய்ய இயலும்.

உங்களின் வாழ்வில் சிறந்த நாள்களில் காசியில் அறம் செய்ய வேண்டும் என்றால் காசியில் அன்னதானம் செய்ய முன்வரலாம். இது ஒரு வாய்ப்பு. காசியில் அறம் வளர்க்க இது ஒரு வாய்ப்பு. இந்த வாய்ப்பில் பலர் கலந்து கொண்டுள்ளனர். பெயர்கூட சொல்ல விரும்பாமல் பல அறக்கொடைகளை நம் வழியாகக் காசி விசுவநாதருக்குப் பலரும் செய்து வருகிறார்கள்.

காசியில், தானங்களில் சிறந்த அன்னதானத்தை காசி விசுவநாதர் திருக்கோயிலுடன் இணைந்து நமது கோவிலூர் மடாலயமும் செய்து வருவது அறிந்த ஒன்றே. குறிப்பாக இவ்வன்னதான அறம் சென்று சேர வேண்டியவர்களுக்குச் சென்று சேர்ந்து பெரும் புண்ணியம் அளித்து வருகிறது. வேதபாடசாலையில் பயிலும் மாணவ மாணவிகள், ஆசிரியர்கள், மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் நோயாளிகள், அவர்களின் உறவினர்கள், போன்ற பலரும் நாள்தோறும் அன்னதானத்தைப் பெற்று மகிழ்ந்து புண்ணிய மொழிகள் ஆசிகள் வழங்கி வருகின்றனர்.

தாங்களும் தங்களின் வாழ்வில் சிறந்த நாட்களில் இந்த அன்னதான அறத்தை மேற்கொள்ளலாம். இறைபணியில் கலந்து கொள்ள இனிய வாய்ப்பு இது. காசியின் அருட்தொடர்பு கிடைக்க நல்வாய்ப்பு. இதனைப் பயன்படுத்திக் கொள்ள அன்புடன் தங்களை அழைக்கிறோம். தாங்கள் பின்வரும் வங்கித் தகவல்களில்

பணம் அனுப்பலாம்.

Following is the account to which you may send in your contribution:

Kasi Visvanathar Koviloor Foundatation

ICICI BANK

KARAIKUDI MAIN BRANCH

A/C NO 606905019750

IFSC ICIC0006069

காசி விசுவநாதர் ஆலயத்தில் திருவாசகம்

தற்போது காசி விசுவநாதர் ஆலயத்தில் திருவாசகம் முழங்குகிறது. நமது அன்பர்கள் நம்வழியாக காசி ஆலய நிர்வாகத்தாருக்கு வேண்டுகோள் வைத்த நிலையில் மூன்று குழுவினர்கள் திருவாசகத்தைக் காசி கோயிலின் உள் பிரகாரத்தில் முழங்கினர். சிவப்புக் கம்பள வரவேற்பு அளித்து அவர்களின் திருவாசகத் தமிழை காசி எம்பெருமான் கேட்டருளினார்.

இதுபோன்று திருவாசகம் முற்றோதல் செய்ய விரும்பும் அன்பர்கள் நம்மைத் தொடர்பு கொண்டால் அவர்களும் காசி விசுவநாதர் திருக்கோயிலில் இருந்து மகிழ்ந்து கசிந்துருகித் திருவாசகம் பாடலாம். காசியில் மட்டும் அவர்கள் மூன்று நாட்கள் தங்கும்படியான வசதியைச் செய்து கொண்டுவரவேண்டும்.

இத்தகைய அளவில் நமது காசித் தொடர்பு பெரிதும் முன்னோர்கள் ஆசியாலும், எம்பிரானின் கருணையாலும் முன்னேறி வருகிறது. இன்னும் சமய, சமுதாய அர்ப்பணிப்புப் பணிகளை நாம் செய்ய காசி விசுவநாதர் அருள்கடைக்கண் காட்டி வருகிறார். இவை நிறைவேறும் தருவாயில் அவற்றைப் பகிர்வோம்.

அகத்தியர் என்னும் பெருங்கடல்

மீண்டும் மீண்டும் நாம் காசி பற்றிச் சிந்திக்கக் கொடுத்து வைத்திருக்கிறோம். காசி தமிழ்ச் சங்கமம் தற்போது நடைபெற்று வருகிறது. மத்திய அரசின் செம்மொழித் தமிழ் ஆய்வு நிறுவனம் தமிழ் மரபில் காசி என்ற நூலை வெளியிட்டுள்ளது. இதன் தொடுப்பு கீழே தரப்பட்டுள்ளது

இதனைத் தொட்டு நீங்கள் காசிக்கும் தமிழகத்திற்கும் உள்ள தொடர்பினை அறியலாம்.

தற்போது மத்திய அரசு நடத்தி வரும் காசி தமிழ்ச் சங்கமத்தின் கருப்பொருள் அகத்தியர் என்பதாகும். அகத்தியர் சிவபெருமானிடம் காசியில் தமிழ் கற்று தென்னகம் வந்து பொதிகை மலையில் இருந்துத் தமிழ் வளர்த்தார் என்பது நாம் அறிந்த ஒன்று. அவரின் இலக்கண நூல் அகத்தியம். அதே நேரத்தில் அவர் இயற்றிய பல மருத்துவ நூல்களும் உலகின் சிறந்த பொக்கிஷங்கள் ஆகும். இவற்றை அறியும் அளப்பறிய வாய்ப்பினைக் காசி தமிழ்ச் சங்கத்தில் பேசுவதற்காக அழைத்தபோது நாம் அறிய முடிந்தது.

அகத்தியர் மற்றும் சித்தர்கள் எழுதிய நூற்றுக்கணக்கான நூல்கள் தமிழர் பார்வையிலும் படவில்லை. உலகின் பார்வையிலும் படவில்லை. சென்னை தாமரை நூலகம் சில நூல்களை உரையுடனும் பல நூல்களை உரையின்றியும் பதிப்பித்து வெளியிட்டுள்ளது. இந்நூல்களைத் தற்போது நாம் நமது நூலகத்திற்காகவும் நமது பயன்பாட்டிற்காகவும் வரவழைத்துள்ளோம். உரை காணப்படாத அகத்தியர் நூல்களுக்கு உரை காண மருத்துவம், தமிழ், மூலிகைகள் ஆகிய துறைகளில் ஆழ்ந்த புலமை உள்ளவர்கள் பெரிதும் தேவைப்படுகிறார்கள். சிலரை நாம் அரிதின் முயன்று தொடர்பு கொண்டுள்ளோம். விரைவில் அகத்தியர் மருத்துவ ஆய்வு மையம் தொடங்கவும் எண்ணம் உள்ளது. நமது கோவிலூரில் பல், கண் மருத்துவம் சிறந்து விளங்கி வருகிறது. இயற்கை மருத்துவம், இதய மருத்துவம் இவையும் கோவிலூரில் விரைவில் தொடங்கப்பட உள்ளன. அவற்றோடு சித்த மருத்துவமும் ஆய்வும் நடைபெற உள்ளது.

அகத்தியர் மருத்துவ முறை நாடி பார்த்தலை அடிப்படையாகக் கொண்டது. நாடி பார்க்கும் மரபு சார்ந்த முறை தற்போது அருகிவிட்டது. அதனைச் சரிவர செய்ய இயந்திரங்களைப் பயன்படுத்தினால் விடை கிடைக்கும் என்ற எண்ணம் மனதில் தோன்ற உடன் நாம் Bio medical engineering ல் முனைவர் பட்டம் பெற்ற முனைவர் செல்லி தேவி

அவர்களை இப்பணி செய்ய இயலுமா என்று வினவினோம். அவர்கள் சில நாட்களிலேயே இத்துறை குறித்த ஆய்வினை ஒருபுறம் செய்து வந்த நிலையில் உடன் அதற்கு அவர்கள் வழி கண்டு இயந்திரமுறையில் நாடி பார்க்கும் முறைமைக்கு அடிப்படை வடிவம் தந்தார்கள்.





இந்தப் பணி சில மாதங்களில் முழுமை பெறும் என்று நம்புகிறோம்

ஒற்றுமையே வலிமை

ஒன்று பட்டால் உண்டு வாழ்வு, நம்மில் ஒற்றுமை நீங்கிடில் அனைவருக்கும் தாழ்வே என்கிறார் மகாகவி பாரதியார். பாரதியாரும் காசி நகர்ப் புலவர்தான். அவருக்கும் காசிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. நமது ஒற்றுமை குறிப்பாக நகரத்தார்களின் ஒற்றுமை மிகச் சிறப்பானது. மூத்தோர் சொல் அமிழ்தம் என்று அறிந்து நடப்பவர்கள் நகரத்தார்கள். தந்தையின் முன்னால் தனையன் மறுபேச்சுரைப்பதில்லை. அண்ணன் வழியே தம்பி வழி என்று வாழ்பவர்கள் நகரத்தார்கள். இருப்பினும் தற்காலத்தில் பலப்பல வேற்றுமை சொல்லி நாம் நம் இனம் பிளவுண்டு பெருமை தேய்ந்து கிடப்பதைக் கண்டு மனம் வேதனையுறுகிறது.

நாம் நம் அமைப்புகளுக்குள் தேர்தல் வேண்டாம் என்ற கருத்தைத் தற்போது வலியுறுத்தி வருகிறோம். அக்கருத்து பலராலும் ஏற்கப்படுகிறது. சிலரால் மறுதலிக்கப்படுகிறது. காசி நகரச் சத்திரத்திற்குத் தேர்தல் வேண்டாம் என்ற நிலை வர நாம் பெரிதும் பாடுபடுகிறோம். இந்தக் கருத்துக்குப் பலரும் வலு சேர்த்து வருகிறார்கள்.

நமது முன்னோர்கள் ஒற்றுமையாய் இருந்து கடல் கடந்து வணிகம் செய்தனர். உலக வணிகக் குடி நகரத்தார் குடியே. நமது கிட்டங்கி ஒற்றுமையின் சின்னம். பலரும் ஒரே வளவில் இருந்துத் தொழில் செய்தோம். நம்மில் போட்டி ஏற்பட்டதில்லை. மற்றவர் வாடிக்கையாளரைக் கைப்பற்றும் நோக்கம் இருந்தது இல்லை.

ஆனால் தற்போது நகரத்தார் அமைப்புகள் அனைத்திற்கும் தேர்தல்

நடைபெறுவது பல சிக்கல்களைத் தருகின்றது. நமக்குள் வேற்றுமை வளர்கிறது. ஒருவரை ஒருவர் குற்றம் சொல்ல வைக்கிறது. தேர்தல்கள் நமது உறவைக் கெடுக்கின்றன. நமது ஒன்பது கோயில்களில் ஒரு கோயிலில் தற்போது தேர்தல் பணிகள் நடைபெறுவதை அறிந்து அதனைத் தவிர்க்க நாம் முயன்று வருகிறோம். இதற்கு ஆதரவுக் கரங்கள் நீள்கின்றன. எதிர் கரங்களும் தங்கள் உரிமை பறிபோவதாக தவறாக எண்ணுகிறார்கள்.

சிறப்பான ஒற்றுமை நிலவ வேற்றுமை ஒழிய தேர்தல் அற்ற குடியாக நம் குடி மாற வேண்டும். மகளிர் சங்க அமைப்புகளில் பெரும்பாலும் போட்டிகள் வருவதில்லை. அது நன்முறை. இம்முறை நகரத்தார் ஆண்களிடத்திலும் வரவேண்டும்.

கம்பனைக் கற்போம்

காரைக்குடியில் ஏப்ரல் மாதம் 9,10,11 ஆகிய நாள்களில் கம்பன் மணி மண்டபத்தில் கம்பன் திருநாள் மாலை நிகழ்வுகளாக நடைபெற உள்ளது. கம்ப அறிஞர்கள் பலரும் இதில் கலந்து கொள்கின்றனர். 12:4:2025 அன்று நாட்டரசன் கோட்டை கம்பன் அருட்கோயிலில் சிறப்புடன் வழிபாடும் இலக்கிய நிகழ்வுகளும் நடக்க உள்ளன. இந்நிகழ்வுகள் அனைத்திலும் கலந்து கொள்ள அன்புடன் அனைவரையும் நாம் அழைக்கிறோம்.

அழைப்பினைக் காண இந்த இணைப்பினைத் தொடவும்.

உத்திரத்தன்று நம் கோவிலூர் ஆண்டவர் குருபூசை. அதில் அன்பர்கள் அனைவரும் கலந்து கொண்டு குருவருளும் திருவருளும் பெற வேண்டுகிறோம்.

அனைவருக்கும் நம் தமிழ்ப்புத்தாண்டு வாழ்த்துக்கள்.

நம் தமிழும் காசி எம்பெருமானும், அகத்தியர் மருத்துவமும் நம்மை மேன்மேலும் பணி செய்யத் தூண்டுகின்றன. அனைவரின் ஒத்துழைப்போடு நலம் பெறுவோம். நிறைந்த ஆசீர்வாதங்கள்.

கோவிலூரின் கதை - 15

திருப்பூவணம் காசிகாநந்த சுவாமிகள் வரலாறு

- முனைவர் மு.பழனியப்பன்
தமிழ்த்துறைத் தலைவர்,
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
திருவாடானை

கோவிலூர் மடலாயத்தின் வேதாந்த மரபு தமிழகத்தின் ஊர் தோறும் பரவி வந்துள்ளது. சிதம்பரம், திருவண்ணாமலை இந்தத் தெய்வீக நகரங்களில் வேதாந்த மரபு செழித்ததுபோலவே திருப்பூவனத்திலும் செழித்தது. தேவகோட்டையைச் சார்ந்த காசி என்றழைக்கப்பெற்ற காளியப்பன் என்ற இயற்பெயர் கொண்ட காசிகாநந்த சுவாமிகள் திருப்பூவனத்தில் மடம் அமைத்து வேதாந்த நூல்கள் பலவற்றை

இயற்றியும் மொழி பெயர்த்தும் ஆற்றிய பணிகள் என்றும் நினைவு கூரத்தக்கவை.

தேவகோட்டையில் மாத்தூர் திருக்கோயிலைச் சார்ந்த மணலூர் பிரிவில பெரியணன் என்ற பெரியார் வாழ்ந்து வந்தார். அவரின் குமாரர் இராமசாமி ஆவார். இவர் பொருள் சிறப்பும், பக்திச் சிறப்பும் ஒருங்கே அமையப் பெற்றவர். இவரின் மனைவி உமையம்பிகை அம்மையாரும் இவரின் கருத்துக்கு ஏற்ப இசைந்து இல்லறம் நடத்தியவர். இவர்களுக்கு அனைத்துச் செல்வங்களும் இருந்தும் மகப்பேறு வாய்க்கப் பெறவில்லை. இது பெரும் குறையாக அவர்களுக்கு அமைந்தது.

ஒருநாள் இவர்களின் இல்லம் நாடி வந்த சிவனடியார் ஒருவர் இவர்களின் இல்லற நல்லறத்தைக் கண்டு இவர்களைப் பாராட்டினார். தங்கள் இல்லத்திற்கு வந்து தங்கிய சிவனடியாரைக் கடவுளாகவேப் போற்றி இவர்கள் வணங்கினார். அவர் இவர்களுக்கு உமையம்பிகை அருளால் மகப்பேறு உண்டாகும் என்று நல்வாக்கு அருளினார்.

சில நாள்களில் உமையம்பிகையாருக்குத் திருவயிறு வாய்க்கப் பெற்றது. நான்கு குழந்தைகள் இவர்களின் குலம் விளங்கப்பிறந்தனர். அவர்களுக்குப் பெரியணன், பழனியப்பன், காளியப்பன், விசாலாட்சி என்று பெயரிட்டு வளர்த்தனர். இவர்களுள் காளியப்பன் காசி என்றும் அழைக்கப்பெற்றார். இவரே ஞானம் தேடி கோவிலூர் அடைந்து வீரசேகர ஞான தேசிகரைப் பணிந்து காசிகாந்த சுவாமிகளாகப் பின்னாளில் அறியப் பெற்றார்.

காளியப்பன் என்ற பெயர் முன்னர் சிவனடியார் சொல்லிய வண்ணம், தேவி உபாசனையால் பிறந்தவராகக் கருதப் பெற்று காளியின் திருப்பெயரைப் பெற்றார். இவர் மற்ற குழந்தைகளைவிட ஞானத் தேடல் உள்ளவராக விளங்கினார்.

திண்ணைப் பள்ளியில் கற்பிக்கும் பாடங்களை விரைவில் கற்றுத் தேர்ந்தார். உலக நீதிகளில் அதிக ஈர்ப்பு செலுத்தினார். குளக்கரைகளில் தம் காலத்தைக் கழித்து வந்தார். குளித்தின் கரை அடுக்குகளில் உள்ள வெண்மை நிறக் கற்கள் எல்லாம் இவருக்குச் சிவலிங்கமாகத் தோன்றின. அவற்றை வழிபடுவது இவரின் வழக்கமாக இருந்தது.

இந்நிலையில் காளியப்பரைப் பர்மாவிற்குத் தொழில்நிமித்தமாக ச்சென்றுவரகுடும்பத்தார்பணித்தன ர். தன் பத்து வயதில் பர்மாவிற்கு வணிகம் செய்ய இவர் சென்றார். அங்கு பர்மிய மொழி, இந்துஸ்தானி (இந்தி) ஆகிய மொழிகளை விரைவில் இவர் கற்றுக்கொண்டார். இம்மொழிகளில் பேசவும் எழுதவும் வல்லவராக இவர் விளங்கினார்.

பர்மாவில் இருந்த காலத்தில் இவருக்கு ஞானத் தேடல் அதிகமானது. அதனால் தாய்நாட்டிற்குத் திரும்பி, தனக்கு ஞானம் நல்கும் குருபிரானைத் தேடினார். பற்பல இடங்ளில் தேடித் தெளிந்து கோவிலூர் வந்து சேர்ந்தார். கோவிலூர் வேதாந்த மடத்தில் குருபிரான சீர் வளர் சீர் வீரசேகர ஞான தேசிக சுவாமிகள் அருளாட்சி செய்து வந்தார். அவரைக் காளியப்பன் வணங்கித் தொழுதார். இவரின் திருமுகப்பொலிவு கண்ட ஞான தேசிகர் இவரை ஆதரிக்கவேண்டும் என்ற எண்ணம் கொண்டார். ஆதரித்துத் தனது தொண்டர் குழாத்துள் ஒருவராக்கி வேதாந்தப் பாடம் சொல்லி வந்தார்.

மூன்று மாதங்கள் இவ்வாறு அருள்பாடம் நடைபெற்றது. அதற்குள் ஞானக் கடலில் பல்வகை முத்துக்களை அள்ளி அவர் கோர்த்துக் கொண்டார். இந்நேரத்தில் தேனிப்பட்டியைச் சார்ந்த அண்ணாமலை சுவாமிகள் காசிப் பயணம் மேற்கொண்டார். அவருக்கு இந்தி தெரிந்த ஒருவர் வழித்துணைக்குத் தேவைப்பட்டார். அதற்குத் தக்கவராகக் காளியப்பர் கொள்ளப்பெற்று அண்ணாமலை சுவாமிகளுடன் காசிப் பயணம் மேற்கொண்டார். இடையிடையே பல திருக்கோயில்களையும் தரிசித்து தெய்வ அனுபவம் பெற்றார்.

தேனிப்பட்டி சுவாமிகள் காசியில் சில மாதங்கள் தங்க நோக்கம் கொண்ட நிலையில் காளியப்பர் கோவிலூர் நினைவில் இருந்த காரணத்தால் ஊர் திரும்பினார். சில காலம் சிதம்பரம் பொன்னம்பல சுவாமிகள் மடத்தில் தங்கியிருந்து நாளும் நடராசப் பெருமானைத் தொழுதார். அதன்பின் கோவிலூர் வந்து வேதாந்தப் படிப்பினைத் தொடர்ந்தார். வேதாந்த நூல்கள் அனைத்தையும் கற்றார்.

மேலும் மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்குச் சென்று அங்கு தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்தார். வேதாந்தப்

படிப்பும் தொடர்ந்தது. தக்க நேரத்தில் வீரசேகர ஞான தேசிகர் இவருக்கு சந்நியாசம் அளித்து காசிகாநந்தர் என்ற அருட்பெயரை வழங்கினார்.

காசிகாந்த சுவாமிகள் வேதாந்தம் அறிய மீளவும் காசிப் பயணம் மேற்கொள்ளச் சித்தமானார். பலரின் உதவியுடன் காசிக்குச் சென்று அங்கு வடமொழி நூல்கடல்களைக் கற்று உணர அவரின் உள்ளம் அவா கொண்டது.

காசியில் வியாகரணம், தர்க்கம், யோகம், சாங்கியம், பூர்வ மீமாம்சை, உத்தர மீமாம்சை போன்ற பிரிவுகள் சார்ந்த நூல்கள் பலவற்றை வடமொழியிலேயே காசிகாநந்தர் கற்றுத் தேர்ந்தார்.

பல நூல்களை இந்தி, மற்றும் சமஸ்கிருதம் ஆகியவற்றில் இருந்து மொழிபெயர்த்து அளித்தார். பல வேதாந்த நூல்களுக்கு நல்லுரை நல்கினார். பல நூல்களைப் பதிப்பித்தார். பல நூல்களை ஆக்கினார். இவரே வேதாந்த உலகில் அதிக அளவில் நூல் தொகுதிகளை வெளியிட்டவர் என்ற பெருமைக்கு உரியவர் ஆனார்.

இவர் 1930 ஆம் ஆண்டில் திருப்பூவணத்திற்கு வருகை புரிந்து அங்கேயே மடம் அமைத்து தவ வாழ்வு மேற்கொண்டு நிறைவாழ்வு பெற்றார்.

நல்வழி பாடல்கள்

பாடல் 29

மரம்பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி

இரந்தழைப்பார் யாவருமங் கில்லை – சுரந்தமுதம்

கற்றா தரல்போல் கரவாது அளிப்பரேல்

உற்றார் உலகத் தவர்

விளக்கம்:

ஒரு மரம் பழுத்தால் அது பறவைகளையோ, மனிதர்களையோ கூவி அழைக்க வேண்டிய அவசியமில்லை, அது போல் அமுதசுரபி போல் அடுத்தவருக்கு இல்லை என்று சொல்லாமல் கேட்டதை கொடுக்கும் வள்ளல்களுக்கு அனைவருமே உறவினர். (கொடுக்கும் வரை தான் உறவு)

சமய எழுச்சியால் சமூக மறுமலர்ச்சி காட்டிய

அப்பர்

பகுதி – 12

அப்பர் எடுத்துரைத்த அறிவுசார் பத்திமை

திருமதி மு. சுப்புலட்சுமி,
வரலாற்றாய்வர்
ஆசிரியர்: www.glorioustamils.com, www.attraithingal.com,
வலையொலி/ podcast அற்றைத்திங்கள்...
வலையொலியில் தமிழொலி

'ஒன்றறி வதுவே உற்றறி வதுவே' எனத் தொடங்கும் தொல்காப்பிய மரபியல் நூற்பா, அறுவகை உயிர்களை வரிசைப்படுத்திக் காட்டுகிறது. 'ஆறறி வதுவே அவற்றோடு மனமே' என்று கண், செவி, மூக்கு, வாய், உடல் என்ற ஐம்பொறிகளின் திறனோடு ஆறாம் அறிவாக மனதைச் சொல்கிறது.

சிலப்பதிகாரத்திலோ, அறிவின் துணைக்கொண்டு ஆய்ந்தறியாது கோவலனைத் தண்டித்த பாண்டிய மன்னரை

'அறிவறை போகிய பொறியறு நெஞ் சத்து இறைமுறை பிழைத்தோன்' (25 26, வழக்குரை காதை),

என்று கண்ணகி சாடினாள். கண்டதும் கேட்டதுமான செய்திகளை நெஞ்சத்தோடிணைத்துச் செயலாற்றாத வேந்தனின் நிலையை 'பொறியறு நெஞ்சத்து' என்ற தொடர் குறிக்கிறது. அதே நேரத்தில் உணர்வால் ஆட்கொள்ளப்பட்ட

நெஞ்சம் அறிவால் சிந்தியாது தவறிழைத்ததை, 'அறிவறை போகிய' என்றதன் மூலம் குறிக்கத் தவறவில்லை ஆசிரியர். பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல்'என்று வள்ளுவர் காட்டிய சமூகநெறியால், சிந்தியாது தவறிழைத்த அரசர் தன்னுயிர் மாய்த்து நீதியை நிலைநிறுத்தினார்.

அடுத்து வந்த பத்திமைக் காலமோ,

'மூக்கு வாய் செவி கண் உடலாகி வந்தாக்கும் ஐவர்தம் ஆப்பை யவிழ்த்தருள் நோக்குவான்ஞ். கச்சி ஏகம்பன் *(05.047.07)* ஐம்புலன்களால் பிணைக்கப்பட்ட நிலையைத் தன் அருள்நோக்கால் விலக்குவான் இறைவனென்று பெருமை சிறுமை நிறை குறையென்று அனைத்திற்கும் இறையருளையே துணைநிறுத்தியது. நெருக்கம் வளர்க்கும் எந்தவொரு உறவுக்கும் உணர்வே அடிப்படையல்லவா? அடியவர்களுக்கு அனைத்துமாய் இருப்பவன் இறைவனென்பதை அப்பரினும் உணர்வு பொங்கச் சொல்வாருமுளரோ?

அப்பன்நீ அம்மைநீ ஐய னும்நீ
அன்புடைய மாமனும் மாமி யும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொரு ளும்நீ
ஒருகுலமும் சுற்றமும் ஒரூ ரும்நீ
(06.095.01)

என்று, எக்காலத்தும் அணுக்கராக இறைவனை உணர்ந்துருகுவதே பத்திமையின் உயிர்நாடி என்றுரைத்தவர் அவர். துணையாயென் நெஞ்சந் துறப்பிப்பாய்நீ' என்று சொல்லி, உலக உறவுகளினின்று நெஞ்சை விலக்கி உய்விப்பதும் இறையருளேயென்று வழிப்படுத்தினார்.

அப்பரின் திருவங்கமாலை மறுபடி மறுபடி எடுத்தாளத் தூண்டும் பதிகம். ஐம்புலனடக்கி இறையெனும் சோதியை மையப்புள்ளியாகக் கொண்டு, பொறிகளைப் பழக்கும் பயிற்சிப் பதிகமது. ஐம்புலன்களோடு தலை வணங்கி, கை தொழுது, கால் கோயிலை வலம் வந்து,

உடல் சிவனுக்கே பணிந்து பணி செய்தாலும், இறைவனையே நினைக்கும் அன்புநிறை நெஞ் சமன்றோ இவையனைத்தையும் இயக்கும் தூய கருவி?

அதனால்தான் அடுத்ததாக, 'தேடித் தேடொணாத் தேவனைத் தன்னுள்ளே தேடிக் கண்டுகொண்டதையும்', 'பாடுவார் பணிவார் பல்லாண்டிசை கூறு பத்தர்கள் சித்தத்துள் புக்குத் தேடிக் கண்டுகொண்டதையும்' ஓயாது எடுத்துக்கூறி இறைவனை நெருக்கத்தில் கொணர்ந்தார் அவர்.

அப்பரின் ஆறாம் அறிவு

இப்படி, நெக்குருகும் நெஞ் சத்தையும் அதில் நிறைந்த இறையன்பையும் இறைவனை எளியோனாக்கி நெருக்கங்கொள்ளும் பத்திமை உணர்வையும் போற்றிப் பாடிய நாவுக்கரசர், பத்திமையில் அறிவுக்கும் பெரும்பொறுப்பைத் தந்தார். உணர்வும் அறிவும் இணைந்ததே மனமென்னும் சிறப்புப்புலம் என்பதை அப்பர் வலியுறுத்திய தன்மையே அவரை மற்ற நாயன்மாரிலிருந்து வேறுபடுத்தி நிறுத்துகிறது.

'என்ன மாதவம் செய்தனை நெஞ் சமே' என நெகிழ்ந்த இறையுணர்வை அறிவுசார் நெறியாகவும் போற்றியது அப்பரின் ஆன்மீகப் பகுத்தறிவு எனலாம். இதுவே அவருடைய ஆறாம் அறிவு. இறைவனையே

நினைந்துருகும் பற்றையே முதன்மை இலக்காகக் கொண்டு வாழ்வது அன்பு பெருக்கெடுக்கும் இறையுணர்வு; ஆனால் இறைவன் பெயரால் தம்மைச் சுற்றியுள்ள மனிதர்களைப் பிரித்தாள்வதையும் வேறுபாடுகள் பெருக்குவதையும் சாடிக் குரல் கொடுப்பது பத்திமையில்

பகுத்தறிவன்றோ?

அதனால்தான், 'நடையை மெய்யென்று நாத்திகம் பேசாதே' என்று உலகியல் வாழ்வே மெய்யென நம்பி இறைவனை மறுத்தோரைக் கடுமையாக எதிர்த்த அதே வேளையில், சமயத்தின் பெயரால் புகுத்தப்பட்ட சமூகக் கேடுகளையும் அறவே மறுத்துக் குரல் கொடுத்த சமூகநீதிப் போராளியாகவும் இருந்தார் அவர்.

அப்பரின் ஆறாம் அறிவு மிகவும் பரந்துபட்ட களம். சமூகப் பொறுப்புணர்வுடன் இறையன்பர்கள் செயலாற்ற நெஞ்சத்தையும் அறிவையும் ஒருசேர எப்படிப் பழக்கச் சொன்னார் அவர்? ஆன்மீகப் பகுத்தறிவென்னும் குடைக்கீழ் அப்பர் முன்னிறுத்தியவை என்னென்ன?

1. உணர்வே இன்றுவரையில் இறைப்பற்றின் வேராக இருக்க, அறிவையும் பத்திமையின் இன்றியமையாப் பொருளாக்கினார்

2. உணர்வும் அறிவும் இணைந்து செயல்பட, தம் நெஞ்சைப் பழக்கினார்

3. சிந்தையில் தெளிவை அப்பரைப்போல் வேறெவரும் வலியுறுத்திலர்

4. அறத்தை அப்பரைப்போல் வேறோர் அடியார் போற்றியதில்லை

5. தன் குறைகள், தன் குற்றங்கள், தன் இயலாமைகளைப் புரிந்து கொள்ளலே, தன்னை உணர்தலின் முதல்படி எனவுணர்த்தினார்

மெல்லமெல்ல ஆய்ந்திட இப்பட்டியல் நீளும் என்பதில் ஐயமில்லை. வரும் பதிவுகளில் இவற்றை விரிவாக நோக்கலாம்.

அப்பர் எடுத்துரைத்த அறிவுசார் பத்திமை

'எல்லாம் அவன் செயல்' என்ற எண்ணத் தாக்கத்திற்கிடையில், இறைவனை உணராத தன்னை 'பொறியிலா அறிவிலேனே' என்று கூறுவதில் புரியும் நாவுக்கரசரின் அறிவுப்பசி. பின்விளைவுகள் குறித்து அறியாதிருந்த தம் நிலையைச் சுட்ட 'விளைவு அறிவிலாமை' என்ற சொல்லையும் பயன்படுத்தினார். தம் பிழைகளுக்குத் தாமே பொறுப்பேற்ற நாவுக்கரசர், புறச்சமயத்தாரை 'விரிவிலா அறிவினார்கள்' என்றழைத்தார்.

பத்திமையில் அறிவென்ற கூற்று இறைவனையடையும் நான்கு வழிகளில் 'ஞானத்தைக்' குறிக்கும். ஆயினும், அப்பர் பாடல்கள் பேசும் மாற்றம் நாடும் சமூகக் கருத்துகள், ஆன்மீக ஞானத்தோடு சமூகம் சார்ந்த அறிவெனவும் கொள்ளத் தோன்றுகிறது.

இறை நம்பிக்கை விதைத்த நெகிழ்த்தும் உணர்வு வித்துக்களை வளர்க்க, அன்பெனும் நீரைப்

பாய்ச்சியதோடு தெளிந்த அறிவெனும் ஒளியை ஊட்டினார். அந்த அறிவொளியே, சமயம் திணித்த கட்டுப்பாடுகளையும் வேறுபாடுகளையும் பிரி வினைகளையும் சார்புகளையும் தெளிவுடன் நோக்கிக் களையெடுக்க அவரைக் குரல் கொடுக்க வைத்தது.

'எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும்/ எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு' என்ற குறள்வழி, இறையெனும் மெய்ப்பொருளைத் தாமே தேடியுணர அப்பர் எடுத்துரைத்த வழிவகைகள் பலப்பல. அவற்றுள், உருகும் உள்ளத்தோடு கைகோர்த்து நிற்பது அறிவு.

திருவொற்றியூர் பெருமானைப் பாடுகையில், *'மனமெனுந் தோணி பற்றி மதியெனுங் கோலை யூன்றிச் சினமெனுஞ் சரக்கை யேற்றிச் செறிகட லோடும் போது' (04.046.02)* என்று மனத்தோடு மதியையும் இணைத்தே பேசினார். அதிலும், மனத்தோணியை நகர்த்தும் கோல் அறிவென்பதைத் தெளிவாகக் காட்டி, தம் அறிவுசார் பத்திமை எண்ணத்தைப் பறைசாற்றினார்.

அப்பருக்கு முன்வந்த காரைக்கால் அம்மையார் வாக்கில்

அறிவானுந் தானே அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்றான் தானே அறிகின்ற
மெய்ப்பொருளுந் தானே விரிசுடர்பார் ஆகாயம்
அப்பொருளுந் தானே அவன்
(அற்புதத் திருவந்தாதி 20)

இறைவன் அனைத்தையும் அறிபவன்; அதனை அறி விப்பவனும் அவனே; அறிவாயிருந்து அறிகின்றவனும் அவனே; அறிகின்ற மெய்ப்பொருளும் அவனே; விரிசுடர் பார் வானாகிய பொருட்களும் அவனேயாம்.

இதே கருத்தை எடுத்தாளும் அப்பர், இறைவனின் அறிவாற்றலைக் குறிக்க

'அறிவிலங்கு மனத்தானை அறிவார்க்கன்றி அறியாதார் தந்திறத்தொன் றறியாதானை' *(06.091.09)*, என்று அறிவு விளங்கும் மனத்தைப் போற்றுவது சிலம்பின் தொடர்ச்சியென நினைத்தல் தவறோ?

எதிலும் முறைமையும் சீர்மையும் எதிர்பார்ப்பவர் என்பதால், அறிவோடு நிறுத்தவில்லை அவர் 'ஆதியு மறிவு மாகி யறிவினுட் செறிவு மாகி' என்று இறையாற்றலுக்கு மேலும் தகவு சேர்த்தார்.

அன்புணர்வினால் கட்டுண்ட நெஞ்சம் இறைவனை நாடும்; அன்புணர்வும் அறிவும் சேர்ந்து

ஆவடு துறையுளானே' (04.057.07) என்றும், அறி வின்மையைச் சுட்டி மனம் வெதும்பினார்.

திருப்பாதிரிப்புலியூர் பதிகத்திலோ (04.094.05), 'சிவனே நமக்குக் கிட்டிய பெரும்பொருளெனச் சொல்லி மனத்தடைத்து, சித்தத்தை ஒருமுகப்படுத்தி, சிவாய நமவென்று ஓதாவிட்டால் இறையருளைப் பெறவியலுமா?' என்று 'அறிவிலாப் பேதை நெஞ்சை' வினவினார்.

திருவாரூர்ப் பதிகத்தில் (06.031.08), துன்பங்களும் தீவினையும் தடுமாற்றமும் பல்பிறப்பும் பாசப்பற்றுகளும் நீங்கி, புண்ணியமும் நன்னெறியும் பெறக்கூடிய வழிவகையை நெஞ்சுக்குரைத்தார். 'ஆரூரா!' என்றலறியழைத்துக் கதறியேத்திப் போற்றித் துதிசெய்து மலர்த்தூவிச் சூழும் வலஞ்செய்து தொண்டு பாடிக் கற்பகமே என்றுருகுவதே உய்வதற்கான வழியாம். இதனைப் புரிந்துகொள்ள 'மதிதருவன் நெஞ்சமே' என, உணர்வு நிறைந்த நெஞ்சத்திற்கு அறிவூட்டினார்.

சிந்தித்த உள்ளம் மனிதம் பேணும் என்பதில் அவர் உறுதியாக இருந்தார். அதனால்தான், 'நீதியேதும் அறிவிலேன் அமரர் கோவேஞ் செய்வதென்னே திருப்புகலூரனீரே' (04.054.04) என்றும், 'நெறிபடு மதியொன்றில்லேன்ஞ் அறி விலேன் அயர்த்துப் போனேன்

இறைவனையடையும் ஒரே சிறந்த வழி அன்பே; அதைப் புரிந்துகொண்டு தெளிவுபெற கூரிய அறிவு வேண்டுமென்பதை அப்பர் பல பதிகங்களில் உணர்த்தக் காணலாம்.

இறைவனை வணங்கும் அடியவர்களுக்குக் கிடைப்பதென்ன?

எல்லையில்லாப் பயன்களை அடுக்கலாம். இறைவனோ 'அறி விலங்கு மனத்தான்'; அன்பால் இறைவனையடையலாம் என்றுணர 'நெறிபடு மதி' வேண்டும்; இப்படி, அறிவால் விளைந்த பத்திமையின் பயனை ஆய்ந்தால் அதுவும் அறிவே என்றார் நாவுக்கரசர்.

'திருச்சேறையுட் செந்நெறி நாரி பாகன்றன் நாம நவிலவே கூரிதாய அறிவுகை கூடிடும்' (05.077.01) என்றார். உள்ளொளிரும் அறிவாற்றலே இறைவனென்று குறிக்க, பூந்துருத்தியிலுறையும் செம்பொன்னான சிவனே தம் 'புந்தியைப் புக்க அறிவு' (04.088.09) என்றுரைத்தார்.

கல்வி, ஞானம், கலைகள், அறங்கள் என்று அறிவு காட்டும் உலகங்கள்தாம் எத்தனை எத்தனை? எனினும், தாமுரைத்த அறிவுசார் பத்திமை நலன்கள் அத்தனையிலும் மனிதத்தையே முதன்மைப்படுத்தியவர் அப்பர்.

இறைவனை வாழ்த்திய வாயும் நினைத்த மடநெஞ்சமும் அறிவின்வழி செல்லப் பழக்குவது ஒரு திறன் வளர்ப்பு. புலனடக்கி, வேண்டுவன நாடி வேண்டாதவை ஒதுக்கி மனதை ஒருமுகப்படுத்தி தம்மையுணர்ந்து ஆழ்நிலையில் இயங்கி இறைவனை உணர்வதே பற்றாளர் கடமை. அக்கடமையில் முழுமை எய்திட, அறிவின் பெருந்துணைக் கொண்டு மனம் இயங்க வேண்டுமென்று தம் பதிகங்கள் வாயிலாகச் சுட்டினார் நாவுக்கரசர்.

அன்பால் விளைந்த இறைப்பற்று, அறிவால் செதுக்கப்பெற்ற இறையுணர்வாகத் தழைத்திட அரும்பாடுபட்ட தொண்டர் அப்பர்.

நன்றி: டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம், திருச்சிராப்பள்ளி.

பண்டெழுவர் தவத்துறை

பகுதி–5

(சிராப்பள்ளிக்கு அருகில் உள்ள தவத்துறையில் அமைந்துள்ள திருக்கோயில் அமைப்பு குறித்த கட்டுரையின் தொடர்ச்சி)

இரா. கலைக்கோவன்,

இயக்குநர்,

டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்,

திருச்சிராப்பள்ளி

சிற்றுருவச் சிற்பங்கள்

இறைவன் விமான, முகமண்டப வேதிக்கண்டத்தின் பாதங்கள் இராமாயண, சிவபுராண, பாகவதக் கதைகளின் படக்காட்சிகளாய் 40 சிற்றுருவச் சிற்பங்களைப் பெற்றுள்ளன. முறையான பராமரிப்பின்மையால் தேய்ந்தும் பொரிந்துமுள்ள இத்தொகுதிகள் முற்சோழச் சிற்பிகளின் வடிப்புகள். விமானத் தின் வடக்குப் பாதங்களில் மேற்கிலிருந்து கிழக்காக இராவண அருள்மூர்த்தி, நரசிம்மர் இரணியன் போர்க்காட்சி, சுவஸ்திகக் கரண சிவபெருமான், சும்பவதம், விஷ்ணு அருள்மூர்த்தி, கொற்றவை, மகிடாசுரமர்த்தினி, விஷ்ணுகருடன், வாலிசுக்ரீவப் போர் ஆகியன அமைய, கிழக்கில் வாலியின் மரணம், இலிங்கவழிபாடு, அண்ணாமலையார், அரிஅரர், ஆலிலைக் கண்ணன், தேவியருடன் மகாவிஷ்ணு ஆகிய சிற்பங்களும் தெற்கில் தென்திசைக்கடவுள், இரணியவதம், நிசும்பவதம், மற்போர், வித்தைக்காட்சி, தாடகைவதம், கஜேந்திர மோட்சம், மகப்பேறு ஆகியனவும் உள்ளன.

முகமண்டப வேதிபாதங்களில் வடக்கில் மேற்கிலிருந்து கிழக்காகக் காமதகனர், கிராதார்ச்சுனர், அருச்சுன அருள்மூர்த்தி, இயமனை உதைத்தவர், முருகன் ஆகிய சிற்பங்களும் தெற்கில் பிள்ளையார், குழுஆடல், காளிவதம், சண்டேசுவர அருள்மூர்த்தி சிற்பங்களும் கிழக்கில் பிச்சைத்தேவர், நந்திஅனுக்கர் சிற்பங்களும் காணப்படுகின்றன. நான்கு சிற்பங்களை அடையாளப்படுத்த முடியவில்லை.

இரண்டு சிற்பங்கள் பெருமண்டபப் புதிய இணைப்பில் சிக்கியுள்ளன.

அனைத்துச் சிற்றுருவச் சிற்பங்களுமே மிகுந்த அழகுணர்வுடன் நாடகக் காட்சிகளைக் கண் முன் நிறுத்துமாறு போலச் செம்மையாக வடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் சில அவை அடைந்திருக்கும் தேய்வையும் சிதைவையும் தாண்டிக் கண்களில் நிறைகின்றன.

அருச்சுன அருள்மூர்த்தி

நந்தியின் தலைமீது வல முன் கையை இருத்தி, அதன் உடல் மீது சாய்ந்தபடி நிற்கும் சிவபெருமானின் பின்கைகளில் மான், மழு. கண்கள் இடப்புறம் நிற்கும் இறைவியை நோக்கிட, இடப்புறம் திருப்பிய பாதங்களுடன் நின்றிருந்தபோதும் இறைவியின் பார்வை வலப்புறத்தே கிரீடமகுடத்துடன் கருடாசனத்தில் வணங்கிய கைகளுடன் இருக்கும் அருச்சுனரை நோக்கியுள்ளது. அருச்சனரின் முன் நிற்கும் பூதம் அவரிடம் பாசுபத அஸ்திரத்தைத் தரும் மெய்ப்பாட்டில் அமைய, அருச்சுனருக்குப் பின்னுள்ள முனிவரை அருச்சுனரின் தவக்கோல வடிவமாகக் கொள்ளலாம். மேலே, மேகங்களுக்குப் பின்னிருக்குமாறு வலப்புறத்தே நால்வரும் இடப்புறத்தே மூவரும் உரையாடுபவர்களாகவும் நிகழ்வைப் போற்றுபவர்களாகவும் காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இராவண அருள்மூர்த்தி

காட்சியின் முக்கால் பகுதியாகக் கயிலாயமலை உள்ளது. கிரீடமகுடம், சவடி, உதரபந்தம், கைவளைகள் அணிந்து மூன்று முகங்களுடன் காட்சிதரும் இராவணன் மண்டியிட்டு அமர்ந்தபடி கைகளால் கயிலாயத்தைப் பெயர்க்க முயல்கிறார். மலையின் வலமேற்பகுதியில் திண்டில் வல முன் கை இருத்தி, வலக்காலால் மலையை அழுத்தும் இறைவனின் இட முன் கை கடகத்தில் உள்ளது. இடப்புறம் அமர்ந்துள்ள உமை அச்சத்துடன் இறைவனைத் தழுவ முயற்சிக்கிறார். வலது கீழ்ப்பகுதியில் மலையை ஒட்டி இரண்டு பூதங்கள் உள்ளன. தலைக்கு மேல் உயர்த்திய கல்லை இருகைகளாலும் பிடித்தபடி மேல் பூதம் நிற்க, கீழுள்ளது கத்தியும் கேடயமுமாய் இராவணனை எதிர்த்து நிற்கிறது. இராவண அருள்மூர்த்தி சிற்றுருவச் சிற்பங்கள் பல கோயில்களில் காணக் கிடைத்தாலும் எதிர்க்கும் பூதங்கள் மிக அரிதாகவே இடம்பெற்றுள்ளன.

சண்டேசுவர அருள்மூர்த்தி

வலப்புறம் முழங்கால்களை

மடித்து வணங்கிய நிலையில் தலையைக் குனிந்தவாறு சண்டேசுவரர் காட்சிதர, இடப்புறம் இருக்கையில் சுகாசனத்தில் சிவபெருமானும் உத்குடியில் உமையும் சண்டேசுவரர் மீது அருட்பார்வை செலுத்துகின்றனர். பெருமானின் பின்கைகளில் மான், மழு. வல முன் கையில் சண்டேசுவரருக்குச் சூட்டக் கொன்றைமாலை கொண்டு, இட முன் கையைத் தொடைமீது வைத்துள்ளார். வலக்கையில் மலரேந்தியுள்ள அம்மை இடக்கையை இருக்கையில் இருத்தியுள்ளார். இருக்கையின் கீழே போற்றி முத்திரையில் ஒரு பூதமும் முழங்கால்களை மடித்து அமர்ந்தநிலையில் ஒரு பூதமும் இருக்க, இக்காட்சியின் சீர்மையைத் தமக்குள் உரையாடுபவர்களாய் வலமேற்புறம் இருவரும் நிகழ்வதனைத்தையும் போற்றுமாறு போல இடமேற்புறம் ஒருவரும் மேகங்களுக்குப் பின்னிருக்குமாறு இணைக்கப்பட்டுள்ளனர்.

தாடகை வதம்

சுடர்முடியும் உயர்த்திய கையில் ஓங்கிய சூலமுமாய்க் காட்சியின் இடமேற்பகுதியில் தாடகையின் பாய்ச்சல். வலப்புறத்தே சடைமகுடம், விசுவாமித்திரரின் வலக்கை, தமக்கு முன் நிற்கும் இராமருக்கும் இலட்சுமணருக்கும் இவள்தான் தாடகை எனக் காட்டிக் கொடுக்கிறது. இராமர் இருக்கும்போதுதான் முயல்வது தகாது எனுமாறு போல இலட்சுமணர் இடக்கை வில்லுடன் அமைதி காக்க, தாடகையின் திறனும் ஆற்றலும் அறிந்தவராய்த் தம் முழு வில்வீச்சையும் தாடகை நோக்கி வெளிப்படுத்தும் ஆலிடக் கோலத்தில் இராமர். காட்சியின் வலப்புறத்தே கீழே, ஆற்றல் சமனுடையதாக இருந்தாலும் அறமே வெல்லும் என்பதை மெய்ப்பிக்குமாறு இராமரால் வெல்லப்பட்ட தாடகை வியப்பு முத்திரை காட்டி வீழ்ந்துள்ளார். பல்வேறு உணர்வுகள் உச்சம் காட்டும் அற்புதச் சிற்பம் இது.

கொற்றவை

முற்சோழர் கோயில்களின் பாதச்

சிற்பங்களில் கொற்றவை இடம்பெறாத இடங்கள் குறைவு. அவர் காட்சிதரும் இடங்களிளெல்லாம் அழகு பொலியும் என்றாலும், இக்கோயில் சிற்பம், நிற்கும் கோலத்தில் உடலின் வளைவுகள் வெளிப்படுத்தும் எழில்களை எப்படியெல்லாம் மேம்படுத்திக் காட்டமுடியும் என்பதை ஒரு சோழச் சிற்பி தம் திறனார்ந்த உளி ஓட்டத்தால் கல்லில் கனியவைத்திருக்கும் காட்சி என்றால், அது மிகையாகாது. எண் கையராய், மேற்கைகளில் சங்கும் சக்கரமும் அமைய, இட இடைக்கைகளில் கேடயம், வில் கொண்டு, முன்கையை முழங்கையளவில் மடித்து இடுப்பருகே நெகிழ்த்தியுள்ள அம்மை, வல இடைக்கைகளில் வாளும் அம்பும் ஏந்தியுள்ளார். வல முன் கை வலத்தோள் தொடுமாறு மடிந்து உயர்ந்துள்ளது. மேலாடை மடிப்பொன்று அக்கையில் தவழ்ந்து கீழே சரிந்துள்ளது. கீழே இருபுறத்துமுள்ள அடியவர்களுள் வலப்புறத்தார் தலையறுத்துத் தரும் மெய்ப்பாட்டில் காட்சிதர, இடப்புறமுள்ளவரின் செயற்பாட்டை அறியக்கூடவில்லை.

வாலியின் வீழ்ச்சி

மகன் அங்கதன் மடியில் இடக்கை இருத்திச் சாய்ந்தபடி வலக்காலை இடக்காலின் மேல் மடித்துப் பாதத்தைப் படுக்கை விளிம்பில் இருத்தியுள்ள வாலியின் வலக்கை அவரது வலமுழங்காலைத் தொட்டவாறு உள்ளது. இடக்கால் எதிர்ப்புறத்தே முழங்கால்களை மடித்து அமர்ந்திருக்கும் தாரையின் மடியில். வலக்கையைப் படுக்கையின் மீதிருத்தி, இடக்கையைத் தலைமீது வைத்து ஓலமிட்டு அழும் தாரையின் முன்னுள்ள குரங்கு, கையால் முகம் தாங்கிச் சோகத்தில் உள்ளது. அங்கதனுக்குப் பின்னுள்ள குரங்கு அவரைப் போலவே அமர்ந்துள்ளது. படுக்கையின் கீழுள்ள வலப்புறக் குரங்கிணை முகத்தில் முகம் புதைத்து அழ, இடக்குரங்கு கன்னத்தை இடக்கையால் தாங்கி, நீட்டியுள்ள வலக்காலை வலக்கையால் பிடித்துள்ளது. அதன் முன்னுள்ள மனிதவடிவம் முழங்கால்களை மடித்துக் கைகளை மேலிருத்திச் சோகத்தில் உள்ளது.

வாலியின் தலைக்குப் பின் தலையில் கைகளை வைத்தபடி ஒரு குரங்கிருக்க, தலைக்கு வலப்புறம் பெண்குரங்கொன்று கைகளை உயர்த்தி அலறி அழுகிறது. வலப்புறம் மேலே, கைகளை உயர்த்தியபடி ஒரு குரங்கும் சோகம் ததும்பிய முகத்துடன் மற்றொரு குரங்கும் காட்சிதருகின்றன. அவலத்தின் உச்சத்தை வெளிப்படுத்தும் இந்தச் சிற்பக்காட்சி தவத்துறையின் மிகச்

சிறந்த சிற்றுருவச் சிற்பங்களுள் ஒன்றாம்.

செப்புத்திருமேனிகள்

இக்கோயிலில் உள்ள பெரும்பாலான செப்புத்திருமேனிகள் காலத்தால் பிற்பட்டன. குறிப்பிடத்தக்கனவாக முனையடுவார், போகசக்தியம்மன், ஆடவல்லான்தொகுதி ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

முனையடுவார்

நாயன்மார் திருமேனிகளுள் ஒன்றான முனையடுவார் வார்ப்புருவம் மாறுபட்ட தலையலங்காரம் பெற்றுள்ளது. பூக்கள் தைத்த நெற்றிப்பட்டம், பூக்கள் பொருந்திய குல்லா போன்ற மகுடம் கொண்டுள்ள இத்திருமேனியின் கழுத்தில் நீள்சரங்கள். தொடைவரை ஆடையணிந்து செவிகளில் பூட்டுக்குண்டலங்களும் பூக்களும் அணிந்துள்ள இவரது திருவடிகள் திரயச்ரத்தில் உள்ளன. இடுப்பில் மடித்துக் கட்டிச் சுருக்கிய பட்டாடை. தலையணிப்பூ ஒன்றிலிருந்து நீளும் பட்டை, தலையின் இடப்புறம் ஒரு வளையம் அமையுமாறு முன்பகுதிப் பூ ஒன்றின் வழியே நுழைக்கப்பட்டுத் தவழவிடப்பட்டுள்ளது. புன்னகை பொலிய வணக்க முத்திரையில் உள்ள இத்திருமேனியின் தளத்தில் முனையாடுவார் என்ற பொறிப்பு உள்ளது.

போகசக்தியம்மன்

தாமரைத்தளத்தில் தலைச்சக்கரத்துடனான கரண்டமகுடம், நீள்வெறுஞ் செவிகள், ஸ்வர்ணவைகாக்ஷம், தோள்மாலை, சவடி, கடக, முன் கை வளைகள், பட்டாடை கொண்டு நிற்கும் இறைவியின் வலக்கையில் நீலோத்பலம். இடக்கை நெகிழ்ந்துள்ளது.

ஆடவல்லான், உமை

வலக்காலை முழங்கால் அளவில் மடித்துப் பாதத்தைப் பார்சுவமாக முயலகன் முதுகின்மீது இருத்தி, இடக்காலைப் பாதம் தாழ்ந்திருக்குமாறு வலப்புறம் வீசிப்

பின்கைகளில் துடியும் தீச்சுடரும் கொண்டு ஆனந்ததாண்டவமிடும் 1. 28 மீ. உயர, நெடிய திருமேனியரான சிவபெருமானின் வலக்காலில் வீரக்கழல். வல முன் கை காக்கும் குறிப்புக் காட்ட, இட முன் கை வேழக்கையாகி உள்ளது. இறைவனைச் சுற்றியுள்ள 1. 12 மீ. அகலத் திருவாசியில் 21 சுடர்கள். அவற்றுள் நடுச்சுடர் அளவில் பெரியது. இறைவனின் இருபுறம் பரந்த விரிசடையில் வலப்புறம் வணங்கியவராய் கங்கை. இடப்புறம் பிறை.

மகர, பனையோலைக் குண்டலங்கள், அரையாடை, வளைகள், கங்கணம், உதரபந்தம், கழுத்தில் மெல்லிய சரம் அணிந்துள்ள இறைவனின் சடைமுடிகளில் கொக்கிறகு, நெருஞ்சி, ஊமத்தம்பூ அமைய, நடுப்பகுதியில் படமெடுத்த இரு பாம்புகள் இணையுமிடத்து மனிதத்தலை. தோள்களில் ஸ்கந்தமாலை. கருடாசனத்தில் குப்புறக்கிடக்கும் முயலகனின் வலக்கால் நீண்டுள்ளது. சடைப்பாரம், பனையோலைக் குண்டலங்கள் கொண்டுள்ள முயலகனின் இடக்கையில் படமெடுத்த பாம்பு. வலக்கை போற்ற, தலை இறைவனை நோக்கியுள்ளது.

தலைச்சக்கரத்துடனான கேசபந்தம், ஸ்கந்தமாலை, மகரகுண்டலங்கள், சரப்பளி, கங்கணம், வளைகள், பட்டாடை அணிந்து திரயச்ரப் பாதங்களுடன் நிற்கும் இறைவியின் வலக் கையில் நீலோத்பலம், இடக்கை நெகிழ்ந்துள்ளது. இந்தக் கோயிலிலுள்ள முதலாம் இராஜாதிராஜரின் கல்வெட்டு ஒன்று ஆடவல்லார் நம்பிராட்டியார் உமாபரமேசுவரியாருக்குத் திருச்சென்னடைக்கு நிலமளித்தமை குறிப்பிடுவதால் இத்திரு மேனிகள் பொ. கா. 11ஆம் நூற்றாண்டிலிருந்தே இங்கிருப்பதாகக் கொள்ளலாம்.

(நிறைவு)

(திருவிளையாடற் புராணம் தொடர்)

ஆடலுக்கு ஆட்படுவோம்

பகுதி-2

காசி ஸ்ரீ முனைவர்
நா.ரா.கி.காளைராசன்
(மேனாள் துணைப்பதிவாளர், அழகப்பா பல்கலைக்கழகம்)

1.சித்திரையைக் கொண்டாடுவோம்

சித்திரை 1 கோள்நிலை

வரும் சித்திரை 1 (14.04.2025) அன்று விசுவாவசு வருடம் தொடங்கவுள்ள நிலையில், திருவிளையாடல் புராணத்தை ஆராய்ந்து பார்த்தால், திருவிளையாடற் புராணம் இரண்டு பாடல்களில் (பாடல் எண் 437 மற்றும் 1289) சித்திரை மாதம் மற்றும் சித்திரை நட்சத்திரம் தொடர்பான செய்திகள் இடம் பெற்றுள்ளதை அறிய முடிகிறது.

விசுவாவசு வருடப்பிறப்பு சித்திரை முதல் நாளில் கோள்நிலை காட்டும் காலச் சக்கரம் இது. வருடப்பிறப்பு அன்று மாலையில் சூரியன் மறைந்த பின்பு, மேற்கே தொடுவானத்திற்குச் சற்று மேலே வியாழன் மிகவும் பிரகாசமான நட்சத்திரம் போன்று திடமான ஒளியுடன் தெரியும். உச்சந்தலைக்கு மேலே செவ்வாய் மிகவும் திடமான ஒளியுடன் ஒரு நட்சத்திரம் போன்று தெரியும். காலையில் சூரியன் உதிப்பதற்கு முன்பு கிழக்கே வெள்ளி சனி புதன் மூன்றும் அருகருகே தெரியும். ஆனால் இவை சூரியனுக்கு அருகே தோன்றித் தெரிவதால், சூரிய வெளிச்சத்தில் இவற்றைக் காண்பது கடினமாக இருக்கும்.

வானில் கோள்களை நாம் நம் வெறும் கண்களால் காணலாம். பார்ப்பதற்கு நட்சத்திரங்கள் போன்று தெரியும். ஆனால் நட்சத்திரம் போன்று

ஆகும்). சூரியன் நாள் ஒன்றுக்குச் சுமார் 1பாகை அளவு நகர்ந்து 365 நாட்களில் 360 பாகை நகர்ந்து, அடுத்த வருடப்பிறப்பு நாளில் மீண்டும் இதே இடத்திற்கு வந்து சேர்ந்துவிடும்.

விண்ணும் மண்ணும்

நாம் வாழும் நிலத்தை முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என 5 பிரிவுகளாகப் பிரித்துத்

மினுமினுக்காமல் திடமான ஒளியுடன் தெரியும். தொடர்ந்து தினமும் பார்த்து வந்தால், இவை அவற்றின் அருகேயுள்ள நட்சத்திரங்களின் வழியே மெதுவாகக் கிழக்கு நோக்கி நகர்ந்து செல்வதை அவதானிக்கலாம்.

வருடப்பிறப்பு நாளன்று சூரியன் அசுபதி நட்சத்திரக் கூட்டத்தில் தோன்றித் தெரியும். சூரியனின் பிரகாசமான ஒளியால், அசுபதி நட்சத்திரக் கூட்டத்தில் சூரியன் இருப்பதை நாம் நம் வெறும் கண்களால் காண இயலாது. ஆனால் அறிவியல் அடிப்படையிலான கணினியில் மென்பொருள் துணையுடன் அசுபதி நட்சத்திரத்துடன் சூரியன் இருப்பதைக் காணலாம். (அசுபதி என்பது தனி நட்சத்திரம் அல்ல, அது ஒரு நட்சத்திரக் கூட்டம்

தொல்காப்பியர் இலக்கணம் வகுத்துள்ளார். பூமியிலிருந்து நாம் வானத்தைப் பார்க்கும் போது அது ஒரு பந்து போன்று காட்சியளிக்கிறது. சூரியனைப் பூமியும் மற்றபிற கோள்களும் சுற்றி வந்தாலும், பூமியிலிருந்து நாம் பார்க்கும் போது வானில் சூரியனும் மற்றபிற கோள்களும் பூமியைச் சுற்றிவருவது போல் தோன்றும். நமது முன்னோர்கள் நிலத்திலிருந்து வானத்தைக் கண்ணுற்று, விண்ணில் ஞாயிறு(சூரியன்), திங்கள்(சந்திரன்), செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி ஆகிய ஏழும் மேற்கிலிருந்து கிழக்காக வலம் வருவதையும் கண்டறிந்து பாடி வைத்துள்ளனர். நாம் பயன்படுத்தும் சாலைகளில் இரண்டு வழிப்பாதை நான்கு வழிப்பாதை



என்று உள்ளது போல், கோள்கள் வலம் வரும் பாதையானது 3வழிப் பாதையாக உள்ளது எனக் கண்டறிந்துள்ளனர். இவை பற்றிய குறிப்புகள் பரிபாடல், நெடுநல்வாடை, புறநானூறு, அகநானூறு, ஐங்குறுநூறு, கலித்தொகை, பதிற்றுப்பத்து முதலான சங்கப்பாடல்களில் இடம் பெற்றுள்ளன.

நமது பார்வையில், வானில் சூரியன் ஒருமுறை வலம் வர 365 நாட்கள் ஆகின்றது. சந்திரன் வானில் வலம் வரும் போது ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நட்சத்திரத்துடன் சேர்ந்து காணப்படுகிறது. 27 நாட்களில் 27 நட்சத்திரங்களுடன் சேர்ந்து ஒரு வலம் வந்துவிடுகிறது. சூரியனும் சந்திரனும் வலம் வரும் பாதையில் 30 நாட்களுக்கு ஒருமுறை இரண்டும் சந்தித்துக் கொள்கின்ற என்பதையும், இந்த 30 நாட்களில் சந்திரனின் ஒளி 15 நாட்கள் வளர்கிறது, 15 நாட்கள் தேய்கிறது என்பதையும் கண்டறிந்து 15 திதிகளாகக் கணக்கிட்டுள்ளனர். ஒரு வருடத்தில் சூரியனுக்கு நேர் எதிரே சந்திரன் முழுநிலவாக 12 முறை தோன்றுகிறது. இதை 12 இராசி மண்டலங்களாகப் பிரித்து 12 மாதங்களாகக் கணக்கிட்டுள்ளனர்.

27 நட்சத்திரங்களின் வழியாகத் திங்கள் ஊர்ந்து செல்லும் பாதையானது அதற்கு மட்டுமே உரிய வழி அல்ல. ஞாயிறு திங்கள் மற்றும் கோள்களின் பாதைகளும் இந்த 27 நட்சத்திரங்களின் வழியாகவே செல்கின்றன.

நமது பார்வையில் சூரியனின் சுழற்சிக் காலம் ஒரு வருடம் (365 நாட்கள்) என்பது தெளிவு. ஆனால் இந்த 365 நாட்களில் முதல் நாள் எது? என்ற கேள்விக்குப் பலரும் பலவிதமான பதில்கள் உண்டு. ஆண்டாண்டு காலமாகச் சித்திரை முதல்நாள் வருடத்தின் தொடக்க நாளாகத் தமிழர் கொண்டாடி வருகின்றனர். இருப்பினும், தை முதல்நாளே வருடத்தின் தொடக்கம் என்று சிலரும், ஆவணி முதல்நாளே வருடத்தின் தொடக்கம் என்று சிலரும் கருத்துக்கள் கூறி வருகின்றனர்.

ஆடு தலையாக உள்ள விண்மண்டலம்

வட்டவடிவமான சூரியனின் சுற்றுப்பாதையானது எங்கே தொடங்கி எங்கே முடிவடைகிறது? இதற்கான விடையை முத்தமிழ்ச் சங்கத்தின் தலைமைப் புலவர் நக்கீரன் கூறியுள்ளார். தமிழ்ப் பாடலில் பிழை இருக்கக் கூடாது என்று இறைவனையே எதிர்த்து வாதாடியவர் இவர். நெடுநல்வாடையில்,

“ .... நுண்சேறு வழித்த
நோனிலைத் திரள்கால்

ஊறா வறுமுலை கொளீஇய
காறிருத்திப்

புதுவ தியன்ற மெழுகுசெய்
படமிசைத்

திண்ணிலை மருப்பின் ஆடுதலை
யாக

விண்ணூர்பு திரிதரும் வீங்குசெலல்
மண்டிலத்து

முரண்மிகு சிறப்பிற் செல்வனொடு
நிலைஇய

உரோகிணி நினைவனள் நோக்கி
ஞ். ”

என்று ஆடு (மேஷ) இராசி தலையாக உள்ளது என்று குறிப்பிட்டு நக்கீரன் பாடியுள்ளார். சந்திரன் ஊர்ந்து திரியும் விண்மண்டலத்தில் ஆடு (மேஷ ராசி) முதலாவதாக உள்ளது. சந்திரனுடன் சேர்ந்துள்ள உரோகிணி நட்சத்திரத்தைக் கண்ட தலைவியானவள் அவளது தலைவனின் வருகைக்காக ஏங்கிக் காத்திருக்கிறாள் என்கிறது இந்தப் பாடல். விண்ணில் ஞாயிறு திங்கள் ஊர்ந்து செல்லும் வட்டவடிவமான பாதையின் தொடக்கம் எது? என்ற கேள்விக்கு, ஆடு (வருடை, மேஷம்) தொடக்கமாக உள்ளது என்று நக்கீரன் பதிலளித்துள்ளார்.

வருடையும் வருடப் பிறப்பும்

அறிவியல்படி, 12 இராசிகளில் முதல்ராசியாக உள்ள ஆடு அல்லது வருடை (மேஷம்) ராசியில், 27 நட்சத்திரங்களில் முதல் நட்சத்திரமான அசுபதி நட்சத்திரத்தில் சூரியன் சித்திரை முதல்நாள் தோன்றித் தெரிகிறது.

நக்கீர் காலத்தில் மெழுகினால் 27 நட்சத்திரங்களும் வரையப்பட்டுள்ளன. மாணிக்கவாசகர் கட்டிய ஆவுடையார் கோயிலில் மாணிக்கவாசகர் சந்நிதி மேல் நிலையில் 27 நட்சத்திரங்களின் உருவங்களையும் அப்படியே சிற்பமாகச் செதுக்கியுள்ளனர். இதிலும் அசுவதி நட்சத்திரமே முதலாவது நட்சத்திரமாகச் செதுக்கப்பட்டுள்ளது.

வருடை (ஆடு) என்ற முதல் இராசியில் உள்ள, அசுபதி என்ற முதல் நட்சத்திரத்தில் ஞாயிறு (சூரியன்) பயணிக்கத் துவங்கும் முதல் நாளே சித்திரை 1 ஆகும்! இதுவே தமிழருடைய வருடப் பிறப்பு நாளாகும் என்பதற்கு வேறுபிற சான்றுகள் தேவையோ!! சூரியனை அடிப்படையாகக் கொண்டு வருடப்பிறப்பு தொடங்குகின்ற காரணத்தினால், இதுவே உலக மக்கள் அனைவருக்கும் பொதுவான வருடப்பிறப்பு ஆகும் என்றால் அது மிகையாகாது!!!

சிறப்பு மிகுந்த சித்திரை

சித்திரை என்ற சொல் திருவிளையாடற் புராணத்தில் இரண்டு பாடல்களில் இடம் பெற்றுள்ளது.

"இருதுவில் சிறந்த வேனிலும், மதி ஆறு இரண்டில் சிறந்த வான் தகரும் ,

பொருவிறார் அகையில் சிறந்த சித்திரையும், திதியினில் சிறந்த பூரணையும்,

மருவு சித்திரையில் சித்திரை தோறும் வந்து வந்து அருச்சித்தோர் வருடம்

தெரியும் நாள் முந்நூற்று அறுபதும் ஐந்தும் செய்த அர்ச்சனைப் பயன் எய்தும்"

(திருவிளையாடற் புராணம் பாடல் எண் 437)

ஒரு வருட காலத்தை 6 பருவ காலங்களாகப் பிரித்துள்ளனர், இவற்றுள் சிறந்தது வேனில் பருவம். 12 மாதங்களுள் சிறந்தது சித்திரை மாதம் (ஆடு, வருடை, மேஷம்). 27 நட்சத்திரங்களுள் சிறந்தது சித்திரை நட்சத்திரம். திதிகளுள் சிறந்தது பூரணை (பௌர்ணமி). சிறப்புடைய இவைகள் ஒன்று கூடும், சித்திரை மாதத்தில் சித்திரை நட்சத்திர நாளில் வந்து வழிபடுபவர்களுக்கு,

காலமாறியாடி அருள்புரிந்து வரும் நடராசருக்கு, ஆகம நெறிப்படி, பூசைப் பொருள்கள் பலவற்றைச் சிறக்க அளித்து, போகத்தையும் வீடுபேற்றையும் (இக பரம் இரண்டையும்) அளிக்கும் பூசையை நடத்தியுள்ளான்.

ஒரு வருடத்தில் 365 நாட்களும் அருச்சனை செய்தால் கிடைக்கும் பலன் கிடைக்கப் பெறுவர் என்கிறது திருவிளையாடற் புராணம்.

“சித்திரை மதியிற் சேர்ந்த சித்திரை நாளிற் றென்னன்

மைத்திரண் மிடற்று வெள்ளி மன்றுளாற் களவு மாண்ட

பத்திமை விதியிற் பண்டம் பற்பல சிறப்ப நல்கிப்

புத்தியும் வீடு நல்கும் பூசனை நடத்த லுற்றான்.”

(திருவிளையாடற் புராணம் பாடல் எண் 1289.)

அளவற்ற அன்பினால், அபிடேக பாண்டியன், சித்திரை மாதம், சித்திரை நட்சத்திர நாளில், கழுத்தில் கருமையான விஷத்தை நிறுத்தி வைத்துக்கொண்டு, வெள்ளியம்பலமாகிய மதுரையில்

இந்திரன் முதலான தேவர்கள் அனைவரும் ஒவ்வொரு வருடமும் சித்திரா பௌர்ணமி நாளன்று மதுரைக்குவந்து அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரரை வழிபடுகின்றனர் என்பது ஐதீகம். இவ்வாறு வணங்கிய இந்திரன் சிவபெருமானிடம் “உனது அடியார்களுள் ஒருவனாக அடியேனும் இருக்க அருளிச் செய்ய வேண்டும்” என வரம் வேண்டிப் பெற்றுள்ளான்.

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரரின் அடியார்களாகிய இந்திரன் முதற்றான தேவர்களுடன் நாமும் ஒரு அடியாராக, வரும் ஸ்ரீ விசுவாவசு வருடத்தில், சித்திரா பௌர்ணமியிலும் வழிபட்டு வேண்டிய வரங்கள் பெறுவோம், வருடம் 365 நாட்களும் வழிபட்ட பலனைப் பெறுவோம்.

தொடரும்

கோவிலூர் ஆதீன வெளியீடுகள்
கோவிலூர் புதையல்கள் - 18

சமாதி வைபவமும் குரு பரம்பரை வரலாறும்

- நூல் அறிமுகம்

- கு. அன்பு மெய்யப்பன்,
உதவிப் பேராசிரியர்,
இராமசாமி தமிழ்க் கல்லூரி,
காரைக்குடி - 3.

இந்நூல் ஆறு பக்கங்களே கொண்ட கையடக்கமான நூல் சமாதி வைபவமும் குருபரம்பரை வரலாறும் என்ற நூல் ஆகும். ஆறாம் பட்டம் சீர்வளர் சீர் தேனிபட்டி அண்ணாமலை ஞானதேசிகர் மறைந்த பின், சமாது வைபவத்தின்போது எழுதப்பட்டுள்ளது. இந்நூல் மூன்று பகுதிகளாக அமைந்துள்ளது.

1.சமாது வைபவம்

2.குரு பரம்பரை வரலாறு

3.குறிப்புரையுடன் அன்னுவயம்

முதற் பகுதி கண்டனூர் நா.பெ. நா.மு. முத்துராமையா என்பவரால் எழுதப்பட்டுள்ளது. சிதம்பரம் கோ. சித மடாலயத்தால் வெளி யிடப்பட்டுள்ளது.

சீர்வளர்சீர் தேனிபட்டி அண்ணாமலை ஞானதேசிகர் மறைந்தபோது, அவருக்குச் சமாது விழா நடத்தப்பட்டுள்ளது. அதன் தொடர்பாக இந்நூல் வெளி யிடப்பட்டுள்ளது.

முதற் பகுதியில், இரண்டு பக்கங்களுக்கு ஸ்ரீ அண்ணாமலை ஞானதேசிகரவர்கள் சமாதி வைபவம் என்னும் தலைப்பில் பதினாறு அடிகளைக் கொண்ட அறுசீர் விருத்தப் பாடல் அமைந்துள்ளது.

கோவிலூர் மடத்தில் பட்டத் திலிருந்த, ஆண்டவர், அருணாசல ஞானதேசிகர், சிதம்பர ஞானதேசிகர், ராமசாமி ஞானதேசிகர், வீரப்ப ஞானதேசிகர் ஆகிய ஐவரைப் பற்றியும் கூறிவிட்டு, சீர்வளர் சீர்அண்ணாமலைஞானதேசிகரைப் பற்றிக் கூறி, அவரது சிறப்புகளையும் கூறுவதாக இப்பகுதி அமைகிறது.

பிரம்ம வித்யா பிரசாரச் சபை நிருவியது, வேதாந்தமே சிறந்தது என்று காரைமாநகரில் வாதம் செய்து வெற்றிக் கொடி நாட்டியது, மடத்திற்கு வேண்டிய பொருளைச் சேர்த்தது, கடவுளுக்கு உரிய பணிகள் யாவையும் செய்து ஆனந்த சொருபமாக அண்ணாமலை ஞானதேசிகர் ஆனதை இப்பாடல் எடுத்துரைக்கின்றது.

இரண்டாம்பகுதியில்,கோவிலூர் குரு பரம்பரை வரலாறு இரண்டு பக்கங்களில் அமைந்துள்ளது. இப்பகுதி, திருவண்ணாமலை ஈசானிய மடம், ஸ்ரீ நடேச ஞான தேசிக சுவாமிகளால் இயற்றப்பட்டுள்ளது. இப்பகுதி ஐந்து வெண்பாக்களால் அமைந்துள்ளது. முதல் வெண்பா முத்துராமலிங்க ஆண்டவரின் பெருமை பேசுகிறது. இரண்டாம் வெண்பா, அருணாசல ஞானதேசிகர் மற்றும் சிதம்பர ஞானதேசிகர் ஆகியோர் விவேகக் கருவியால் உழுது வேதாந்தத்தப் பயிரை கோவிலூரில் விதைத்ததைப் பாடுகிறது. மூன்றாம் வெண்பா, வேதாந்தப் பயிரை, இராமசாமி ஞானதேசிகர், வீரசேகர ஞானதேசிகர் மற்றும்அண்ணாமலை ஞானதேசிகர் ஆகியோர் பராமரித்து அனுபவித்ததைப்பாடுகிறது. நான்காம் வெண்பா, காரைக்குடி மாநகரில் அண்ணாமலை ஞானதேசிகர் வேதமே உயர்ந்தது என்று வாதிட்டு வென்ற நிகழ்வைப் புகழ்கிறது. ஐந்தாம் வெண்பா, சித்தார்த்தி வருடம் வைகாசி மாதம் 8ஆம் நாள் (கி.பி.1919) அண்ணாமலை ஞானதேசிகர் வீடுபேறு பெற்றதைப் பாடுகிறது.

இறுதியாக இரண்டு பக்கங்கள், குறிப்புரையுடன் அன்னுவயம் என்று அமைகிறது. இப்பகுதியில் மேற்கண்ட பாடல்களுக்குக் குறிப்புரையும், அன்னுவயமாகவும் (காரண காரியத் தொடர்பு – கொண்டு கூட்டு) அமைகிறது.

காரைக்காலம்மையாரின் அற்புதத் திருவந்தாதி பாடல் நலம் - 21

அட்ட மூர்த்தி

- வாகீச கலாநிதி
கி.வா. ஜகந்நாதன்

ஓர் அழகான மாளிகை. எங்கே பார்த்தாலும் வண்ண வண்ணச் சித்திரங்கள், வேண்டிய வசதிகளெல்லாம் அமைந்த அறைகள், கூடங்கள், அங்கங்கே கட்டில்கள், அலமாரிகள், நாற்காலிகள். இத்தனை அழகான மாளிகையைக் கட்டினவர் மாளிகைக்கு வேண்டிய மூலப்பொருள்களை உள்ளூரிலே உண்டாக்கினார். செங்கற் சூளை போட்டுச் செங்கல்லை அறுத்தார். சுண்ணாம்புக் காளவாய் போட்டார். தம்முடைய காட்டிலிருந்து மரங்களை வெட்டி வந்து பயன்படுத்தினார். மரம், மண், கல் இவ்வளவையும் வைத்துக்கொண்டு மாளிகையை உருவாக்கிவிட்டார். மண்ணைக் குவித்திருந்தபோது பார்த்தால் இதுவே செங்கல்லாகும் என்று தெரியாது. கட்டைகளை அடுக்கியிருந்தபோது பார்த்தால் இவையே கதவாகும் என்று தெரியாது. மூலப்பொருளாக இருந்தவற்றைப் பார்த்தால் அவற்றில் கவர்ச்சி இல்லை. மாளிகையைப் பார்த்தால், பார்க்கப் பார்க்க அழகாக இருக்கிறது.

அவ்வளவு தூரம் போவானேன்? வெறும் களிமண் அழகிய குடமாகிறது; மண் கூஜா ஆகிறது. மண்ணும் நீரும் கலந்து குழைத்து உருவாக்கிக் கனலில் சுட்டபிறகு வடிவும் வண்ணமும் உண்டாகிவிடுகின்றன. பார்க்க அழகிய குடமாக, கூஜாவாகத் தோன்றுகின்றன. வெறும்

கட்டையில் அற்புதமான சிற்பத்தைச் செதுக்கவில்லையா?

இப்படி மனிதன் சில மூலப்பொருள்களை வைத்துக் கொண்டு எத்தனை அழகிய படைப்புக்களைப் படைக்கிறான்! அந்த மூலப்பொருள்கள் இல்லாவிட்டால் அழகான வடிவங்களைப் படைக்க முடியாது.

மனிதனுடைய படைப்பே இவ்வளவு அற்புதமானால்' இறைவனுடைய படைப்பின் அற்புதத்தைச் சொல்ல வார்த்தை ஏது? அண்டத்தையும் பிண்டத்தையும் படைத்துத் தந்திருக்கிறான் ஆண்டவன். அண்டம் என்பது பிரபஞ்சம்; பிண்டம் என்பது உடம்பு.

உயிர் குடியிருக்கச் சிறிய வீட்டைப் போல இந்த உடம்பைப் படைத்துத் தந்திருக்கிறான். இந்தச் சிறிய வீட்டைப் போலப் பல கோடி வீடுகளை நடமாடும்படி வைத்திருக்கிறான். இவை அசையும் வீடுகள். இவை யாவும் உலவ மிகப் பெரிய இடமாகிய பிரபஞ்சத்தையே படைத்திருக்கிறான். உடம்பும் சரி, பிரபஞ்சமும் சரி, ஒரே வகையான மூலப்பொருள்களால் ஆனவை. அவை பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்னும் ஐந்து. அந்த ஐந்தே பிரபஞ்சமாக வடிவெடுத்திருக்கின்றன; உடம்பாகவும் உருவெடுத்திருக்கின்றன. அதனால்தான், "அண்டத்தில் உள்ளது பிண்டத்துக்கும்" என்ற பழமொழி எழுந்தது.

ஐந்து பூதங்களால் அமைந்த பொம்மையாகிய, உடம்பு அதே ஐந்து பூதங்களாலான பிரபஞ்சமென்னும் பெரிய மாளிகையில் உலவுகிறது. ஐந்து பூதங்கள் தனித்தனியாகவும் இருக்கின்றன; ஒன்றோடு ஒன்று கலந்தும் இருக்கின்றன; வானாகவும் காற்றாகவும் கனலாகவும் நீராகவும் மண்ணாகவும் இருக்கின்றன; இவையெல்லாம் கலந்த மரமாக,

மட்டையாக, வெவ்வேறு பண்டமாக இருக்கின்றன. இந்த அற்புதமான பிரபஞ்ச வீட்டுக்குப் பகலில் ஒளிதரக் கதிரவனாகிய விளக்கையும், இரவில் ஒளிதரத் திங்களாகிய விளக்கையும் ஏற்றிவைத்திருக்கிறான் இறைவன். இவ்வளவு வசதிகளைச் செய்து உடம்பையும் தந்து உயிரை உலவ விட்டிருக்கிறான்.

எந்த விதமான ஆழமான தத்துவ ஆராய்ச்சியும் பண்ணாமல் பார்த்தால், இந்த விரிந்த உலகத்தில் வானமும் காற்றும் அனலும் புனலும் மண்ணும் தெரிகின்றன; சந்திர சூரியர்களைக் காணுகிறோம்; இவற்றினிடையே உயிர் தன் வாழ்வை நடத்திக் கொண்டு வருகிறது. உயிர் இன்ப துன்பங்களை நுகர்வதற்காகவே இறைவன் இவ்வளவையும் படைத்துத் தந்திருக்கிறான் என்று தோன்றுகிறது. ஐந்து பூதங்களும் சூரிய சந்திரர்களுமாகிய ஏழும் ஜடப்பொருள்கள். உயிர் மட்டும் சித்துப் பொருள்.

இறைவனை நாம் கண்ணிலே காணுவதில்லை. ஏழு ஜடப் பொருள்களையும் காணுகிறோம். உயிர்கள் இருப்பதையும் உணர்கிறோம். எந்த வகையால் உணர்ந்தாலும் அவற்றைப் பிரத்தியட்சம் என்று சொல்வோம். ஜடப்பொருள்கள் ஏழும் புலன்களால் உணர்வதற்குரியவை; பிரத்தியட்சப் பிரமாணத்தால் அறியத் தக்கவை. உயிரை அநுமானத்தால் ஊகிக்கிறோம். ஆகவே இந்த எட்டுப் பொருள்களையும் ஓரளவு அறிவுடையவனும் தெரிந்துகொள்ள முடியும்.

இறைவன் பொறிகளுக்கும் அறிவுக்கும் எட்டாதவன். உடம்பு இயங்குவதைக் கொண்டு அதனூடே உயிர் இருப்பதை உய்த்துணர்ந்து கொள்வது போலப் பிரபஞ்சம் ஓர் ஒழுங்கு முறையில் நடைபெற்று வருவதைக் கொண்டு, அவற்றை அவ்வாறு நடத்தும் ஓர் ஆற்றல், ஒரு சித்துப் பொருள் இருக்க வேண்டும் என்று உய்த்துணர வேண்டும்.

உயிருக்கு வடிவம் இல்லை. ஆனால் தான் எடுத்த உடலையே தனக்கு வடிவாக ஏற்றுக் கொள்கிறது. இந்த வடிவத்தை உயிர் இயக்குகிறது. பஞ்சபூதங்களும் எப்போதும் தொழிற்பட்டுக்கொண்டே இருக்கின்றன. கதிர்களும் எப்போதும் சுழன்று கொண்டே இருக்கின்றன. இவற்றைச் செயற்படுத்தும் ஆற்றலாகிய சித்துப் பொருள் இவற்றினூடே இருந்து இயக்குகிறது.

அந்தப் பொருள் கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் இந்த ஜடப் பொருள்களையே தனக்குரிய வடிவமாகப் பெற்று இவற்றை இயக்குகிறது.

இறைவன் குறி குணம் கடந்து நிற்பவன். அவனை வடிவத்தில் பாவித்து வணங்குகிறோம்; வடிவம் அமைத்து வழிபடுகிறோம். ஒவ்வொரு காலத்தில் அன்பர்களுக்கு இறைவன் வெவ்வேறு வடிவத்தில் எழுந்தருளி வந்து அருள் பாலித்திருக்கிறான். விடையேறும் வித்தகனாகவும், தட்சிணாமூர்த்தியாகவும், அர்த்தநாரீசுவரனாகவும். நடராசனாகவும், விநாயகனாகவும், குமரனாகவும், உமையாகவும், வடிவெடுத்து வந்து காட்சி அளித்திருக்கிறான். அவற்றை நினைப்பூட்டிக் கொள்ள அந்த வடிவத்தின் சின்னங்களை வைத்து நாம் பூசிக்கிறோம். இவற்றையே விக்கிரகம் என்றும் திருமேனிகள் என்றும், அர்ச்சை என்றும் மூர்த்திகள் என்றும் சொல்லி வணங்குகிறோம். மூலப்பொருளாகவே எண்ணிப் பக்தி செய்கிறோம்.

ஆனால், இறைவன் எப்போதுமே மேலே சொன்ன ஐந்து பூதங்களையும் சூரிய சந்திரர்களையும் அதிஷ்டித்து நின்று அவற்றை இயக்குகிறான். அவற்றையே தன் மூர்த்தங்களாக வைத்து, உள்ளிருந்து இயக்குகிறான். நாம் வழிபடும் மூர்த்தங்களுக்கும் இந்த மூர்த்தங்களுக்கும் ஒரு வேறுபாடு உண்டு: நாம் வழிபடுபவை நாமாக உண்டு பண்ணுபவை. பஞ்ச பூதம் முதலியவை இறைவனே படைத்துக் கொண்டவை. நாம் வழிபடும் விக்கிரகங்கள் நாம் கண்ட திருமேனிகள். பஞ்ச பூதங்களும் சந்திர சூரியர்களும் அவன் கண்ட

திருமேனிகள்.

ஜடமாகிய ஏழு பொருள்களையும் உள்ளிருந்து இயக்குவது போலவே, சித்தாகிய உயிரையும் இறைவன் உள்ளிருந்து இயக்குகிறான். அதனால்தான் அவனே உயிர்க்கு உயிராகி நிற்பவன் என்று பெரியவர்கள் சொல்வார்கள். உடல் இயங்க உயிர் இன்றியமையாமல் இருப்பது போல, உயிர் இயக்கவும் உயிர்க்குயிர் ஒன்று வேண்டும். ஒன்று ஆத்மா; மற்றொன்று பரமாத்மா.

இயக்கப்படுவன எல்லாம் இறைவனுடைய வடிவுகள் என்றால், உயிரும் இறைவனுடைய வடிவென்றே கொள்ள வேண்டும். வடிவத்தையும் வடிவை உடையவனையும் வேறுபாடின்றிப் பார்ப்பது ஒரு முறை. விக்கிரகங்களை இறைவனாகவே பாவிப்பது பக்தர்கள் இயல்பு. “இவன் அவனெனவே” என்று மாணிக்கவாசகர் பாடுவார். நாமாகச் சிலையிலும் செம்பிலும் வடித்த வடிவுகளையே இறைவனின்றும் வேறாக எண்ணாமல் பக்தி பண்ண வேண்டுமென்றால், இறைவன் தானாகக் கொண்ட வடிவங்களையும் அவனாகவே எண்ணி வழிபடுவதும் முறைதான்.

ஆகவே பஞ்சபூதங்களையும் சந்திர சூரியர்களையும் உயிரையும் அவனாகவே கண்டு வழிபடுவார்கள் பெரியவர்கள். இறைவன் இப்படி அமைந்த எட்டு வகை வடிவாகவும் இருப்பதால் அவனை அட்டமூர்த்தி என்று சொல்வார்கள். போன பாடலின் விளக்கத்தில் காட்டிய அப்பர் சுவாமிகள் திருப்பாட்டில், “அட்ட மூர்த்தியாகி” என்று வருவதைப் பார்த்தோம்.

அவனுடைய மூர்த்தங்களை அவனாகவே பாவிக்கும் சிறந்த பக்தி உணர்வில் காரைக்கால் அம்மையார் பாடுகிறார்.

வானத்தில் பகலிலும் இரவிலும் தோன்றிச் சுடர் விடும் கதிரவனையும் திங்களையும் அவர் வேறாகக் காணவில்லை. அந்த இரு சுடரும் சிவபிரானே என்று கண்டு கும்பிடுகிறார்.

"அவனே இரு சுடர்"

அவை மட்டுமா? விரிந்து எல்லாவற்றையும் தன்னுள் அடக்கி வைத்திருக்கும் வானத்தைப் பார்க்கிறார். எல்லை காண முடியாத அந்த ஆகாசத்தைச் சிவனாகவே காண்கிறார். எல்லாவற்றையும் எரித்தும், பக்குவப்படுத்தியும், ஒளிதந்தும் நிலவும் தீயும் சிவனாகவே தோன்றுகிறது.

"அவனே தீ ஆகாசம் ஆவான்"

அவை மட்டுமா? நமக்கு ஆதாரமாக இருந்து நம்மைத் தாங்கும் புவியும் அவன்தான். நமக்கு உணவாகவும் உணவை உண்டாக்க இன்றியமையாத கருவியாகவும் இருக்கும் புனலும் அவன்தான். நமக்கு மூச்சுக் காற்றாக நிற்கும் வாயுவும் அவன்தான்.

"அவனே புவி புனல் காற்று ஆவான்"

இதுவரையில் சொன்னவை ஜடமாகிய ஏழு பொருள்கள். இனி, சித்துப் பொருளாகிய உயிரைச் சொல்ல வருகிறார். அட்டமூர்த்திகளில் எஜமானன் என்று உயிரைக் குறிப்பார்கள். வேள்வி செய்யும் தலைவனுக்கு எஜமானன் என்று பெயர். தமிழில் இயமானன் என்று வரும். உயிர்களில் மனிதன் உயர்ந்தவன். மனிதர்களில் வேள்வித் தலைவன் உயர்ந்தவன். ஆதலின் அட்டமூர்த்திகளைச் சொல்லும் போது இயமானனைச் சொல்வர். உயிர் என்றும் சொல்வதுண்டு. காரைக்காலம்மையார் இயமானன் என்றே சொல்கிறார். முன்னே சொன்ன ஏழோடு இயமானனும் சேர்ந்து இறைவன் எட்டு மூர்த்தங்களை உடைய அட்டமூர்த்தியாக விளங்குகிறான்.

"இயமானனாய் அட்ட மூர்த்தியுமாய்."

இவ்வாறு இறைவன் இருப்பினும் இவற்றை எல்லாம் கடந்து நிற்கிறான் அவன். சிற்றறிவுடைய உயிரையும் தன் வடிவங்களில் ஒன்றாக மேற்கொண்டிருந்தாலும் அவன் முற்றறிவுடையவன்; எல்லாம் அறிந்த ஸர்வஜ்ஞன்; பூரண அறிவுடையவன். அவன் ஞானமே வடிவானவன்;

ஞானமயன்.

பஞ்சபூதங்களென்றும் இரு சுடரென்றும் இயமானனென்றும் சொல்லி விட்டதைக் கொண்டு அவனை எல்லைக்குள் அடக்கி வைத்து, அளவுக்குள் அடங்குபவன் என்று நினைக்கக்கூடாது; அவன் பரம சூக்குமமான ஞானசொரூபி என்பதை நினைவுறுத்துகிறார்.

“ஞான மயனாகி நின்றானும் வந்து”

பிரத்தியட்சப் பொருளாகிய ஏழு ஜடப் பொருளாகவும், அநுமானப் பொருளாகிய இயமானனாகவும் தோற்றம் அளித்தாலும் அவன் பரமஞானமயனாய், அதிசூட்சுமமான பொருள் என்பதை மறக்கக் கூடாது. ஆதலின் இறுதியில் அதைச் சொல்லிப் பாட்டை நிறைவேற்றுகிறார் காரைக்கால் அம்மையார்.

அவனே இருசுடர், தீ, ஆகாசம்ஆவான்;

அவனே புவி, புனல், காற்று ஆவான்;அவனே

இயமானாய் அட்ட மூர்த்தியுமாய், ஞான

மயனாகி நின்றானும் வந்து.

இது அற்புதத் திருவந்தாதியில் வரும் 21ஆவது பாட்டு.

(தொடரும்)

ஆத்ம சமர்ப்பணம் செய்து ஈசனை அடைந்த நந்தனார்

தேனம்மை இலக்குமணன்,
காரைக்குடி

இறை பக்தி என்றால் அது எந்த அளவு இருக்க முடியும்? இறைவனைத் தரிசிக்க நாம் மலைமீதும் பனி மலைமீதும் ஏறிச் செல்வோம், பள்ளத்தாக்கைச் சுற்றுவோம், நதி மீது பயணிப்போம், கடல் தாண்டியும் செல்வோம். இதுவே நம் அதிகபட்சப் பக்தி. ஆனால் மற்றையோரைப் போலத் தான் நேரில் காணமுடியா இறைவனின் திருவுருவைக் காணக் கொழுந்து விட்டெரியும் நெருப்பினில் புகுந்து இறைவனுடன் ஐக்கியமானார் நந்தனார் என்னும் பெயர் கொண்ட ஒரு நாயன்மார். உச்சபட்சப் பக்தியின் எடுத்துக்காட்டாய் விளங்கிய இவருக்குத் திருநாளைப் போவார் என்னும் பெயருமுண்டு.

சிதம்பரத்துக்கு அருகே காவிரி பாயும் கொள்ளிடம் என்னும் கிளைநதியின் கரையில் அமைந்திருந்தது ஆதனூர். அந்த ஊரில் எந்நேரமும் சிவசிந்தனையுடன் வாழ்ந்து வந்த நந்தனார் என்றொரு நல்மனிதர் இருந்தார். இவர் கோயில்களின் பயன்படுத்தப்படும் வாத்தியங்கள், பேரிகைகள், முரசங்களுக்காகத் தோல்களைப் பதப்படுத்தித் தரும் பணியில் ஈடுபட்டு வாழ்ந்தார். கோயில்களின் தேவைக்கு ஏற்ப விசிவார், கோரோசனை போன்ற பொருட்களையும் கொடுத்து வந்தார்.

சிறுவயதிலிருந்தே இவர் சிவனின் மேல் காதலாகிக் கசிந்துருகிக் கண்ணீர் மல்கிப் பாடுவார், ஆடுவார். அவரின் வயது ஏற ஏறப் பக்தியும் அதிகரித்தே வந்தது. அக்கால முறைப்படி இவர் பிறந்த குலத்தின் காரணமாகக் கோயிலுக்கு உள்ளே சென்று இறைவனை வழிபட முடியாதபடியான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. இவருக்கோ

சிந்தையெல்லாம் சிவன், அவனே இவர் சீவன். எனவே பக்கத்தில் உள்ள திருப்புன்கூர் தலத்துக்குச் சென்று இறைவனை வணங்கினார்.

கோயிலின் உள்ளே செல்ல இயலாது. ஆகையால் மருகியும் உருகியும் நின்றபடி அவர் இறைவனைத் தொழுது கொண்டிருந்தார். தன்னைக் காண ஏங்கும் தன் ஆத்மார்த்தப் பக்தனைச் சிவன் பார்த்தார். அவனுக்கு நேரடியாகவே காட்சி தர விரும்பித் தன் எதிரே மண்டியிட்டு அமர்ந்திருந்த நந்தியைச் சிறிது விலகும்படி ஆணையிட்டார். நந்தியம்பெருமானும் சிவன் கூறியபடி விலகித் தலை சாய்க்க அங்கே நந்தனாருக்கு ஈசனின் தரிசனமும் பரவசமும் ஒருங்கே கிட்டியது.

பணிந்து பலமுறை வணங்கிய நந்தனார் அக்கோயிலை வலம் வந்தார். வழியில் அவ்வூரின் ஓர் இடத்தில் நிலம் தாழ்ந்திருக்க அந்த இடத்தைத் தோண்டி அழகான ஒரு திருக்குளம் அமைத்தார்.

திருப்புன்கூரில் கிடைத்த சிவ தரிசனத்தால் மகிழ்ந்து போன அவருக்குப் பல ஊர்களிலும் கோயில் கொண்டு உறைந்துள்ள ஈசனைத் தரிசிக்கும் ஆவல் மேலோங்கியது.

ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் சென்று திருத்தொண்டு புரிந்து சிவனை வெளியில் நின்றபடியே வணங்க ஆரம்பித்தார். எல்லா சிவனையும் கண்டவர்க்கு வெகுநாளாகத் தில்லைச் சிவனையும் காண வேட்கை மிக்கூர தினமும்

விடிந்ததும் செல்ல எண்ணுவார். ஆனால் தன் குலத்தை எண்ணித் தயங்குவார். அதனால் தினமும் ”நாளைப் போவேன் நாளைப் போவேன் ” என்று தனக்குள்ளேயே கூறிக் கொள்வார். இதனால் இவர் பெயர் திருநாளைப் போவார் ஆயிற்று.

எத்தனை நாட்கள்தான் இவ்வாசையை அடக்கி வைக்க இயலும். அவரால் தினமும் தூங்கக் கூட இயலவில்லை. இரவெல்லாம் விழித்திருப்பார். பற்றற்றான் மேல் வைத்த அளவற்ற பற்றால் ஒரு நாள் அவர் விடிந்ததுமே தில்லையை நோக்கிச் செல்லத் தொடங்கினார். தில்லையின் எல்லையை அடைந்ததுதான் தாமதம். அங்கே ஊரிலிருந்து எழுந்து வரும் வேள்விப் புகை அவரைத் தடுத்தது.

வேதம் ஓதும் ஒலி எங்கும் நிறைந்திருந்தது. தாம் செல்லலாமோ கூடாதோ என்று தயங்கிக் கைக்கூப்பியபடியே நகர் எல்லையை வலம் வந்தார். இவ்வாறு பகல் இரவு எனப் பல தினங்கள் கழிந்தன. ஒருநாள் அவர் துயில் கொண்டபோது அவரது கனவில் தில்லைக் கூத்தர் தோன்றினார். வெகு பிரகாசமாக இருந்த அவரைச் சுற்றிலும் வேள்விப் புகையும் வேத ஒலியும் நிறைந்திருந்தன. இறைவனது திருக்காட்சியைக் கண்ட நந்தனார் தன்னை அவர் அதனூடே அழைப்பதாக உணர்ந்தார்.

அதே திருக்காட்சியைக் கூத்தனின் கட்டளையாகத்

தில்லைவாழ் அந்தணர்களும் தம் கனவில் கண்டார்கள். இறைவனை அடைய விரும்பிய நந்தனார் விடிந்ததும் எழுந்து காலைக் கடன்களை முடித்துத் தம்மைத் தூய்மைப்படுத்திக் கொண்டு கோயிலின் தெற்கு வாயிலை அடைந்தார்.

அங்கோ வேள்வித் தீ கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது. சிறிதும் தயங்கவில்லை நந்தனார். உடுக்கையோடு திருநடனமாடிய தில்லைக்கூத்தனின் திருவுருவாக அந்நெருப்பினைத் தரிசித்தார். ”இன்று நாளை என்று நாளை எண்ணிக் கொண்டிருந்தேன். இதோ ஈசனே இன்றுதான் அந்த நாள் எனப் புரிந்தேன். இப்பொழுதே உம்மை அடைய வருகிறேன்” என்று தன் இரு கரங்களையும் நீட்டி இறைவனை

ஆலிங்கனம் செய்வது போல் விரைந்து ஓடி வேள்வித் தீயில் புகுந்தார்.

சுற்றிலும் நமச்சிவாய கோஷம் ஒலித்தன. எல்லாரின் ஒலியையும் மீறி அவ்வொளி இன்னும் அதிகமாகக் கொழுந்து விட்டு எரிந்தது. தம் ஆத்மார்த்த அர்ப்பணிப்பால் அடிமுடி அறியவொணா இறைவனின் அருட்சோதியில் இரண்டறக் கலந்த நந்தனார் என்னும் திருநாளைப் போவார். இவர் என்றும் ஆத்மச் சமர்ப்பணப் பக்திக்கு எடுத்துக்காட்டாய்த் திகழ்கிறார் என்பது உண்மை.

சிவாலயங்களின் சிறப்புகள் - 14

சிவனேச செல்வர்களுக்குப் பணிவான வணக்கங்கள்.

சிவாலயங்களின் சிறப்புகளை மாதம் ஒரு திருக்கோயில் என எழுத இருக்கிறேன். இந்தத் தகவல்கள் கோயிலின் ஆலய குறிப்புகளில் இருந்தும் கோயில் குருக்கள் சொல்வதை வைத்தும் எழுதி எழுதியுள்ளேன்.

வே.இராமசாமி, B.Com.F.C.A.,
Chartered Accountant
பலவான்குடி

நவகைலாயம் பகுதி- 4

தமிழகத்தில் தாமிரபரணி கரையில் அமைந்துள்ள நவகைலாயம் என்று அழைக்கப்படும்ஒன்பது சிவாலயங்கள் குறித்த கட்டுரையின் தொடர்ச்சி

7. புதன் தென்திருப்பேரை கைலாசநாதர் கோவில் ,தென்திருப்பேரை.

நட்சத்திரம்: ஆயில்யம், கேட்டை, ரேவதி

மூலவர்: ஸ்ரீகைலாசநாதர்

அம்பாள்: ஸ்ரீஅழகிய பொன்னம்மை

திருக்கோவில் விருட்சம்: வில்வம்

தீர்த்தம்: தாமிரபரணி.

ஸ்ரீவைகுண்டத்தில் இருந்து எட்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. புதன் பகவான் ஆட்சி புரியும் ” தென் திருப்பேரை ” ஏழாவது தலமாகும். நவ கைலாயங்களில் ஒன்றான இத் தலம் நவ திருப்பதிகளில் ஒன்றாகவும் விளங்கும் இரட்டை சிறப்பு கொண்டது. திருநெல்வேலியில் இருந்து சுமார் 40 கி.மீ. தொலைவில் உள்ளது.

கருவறையில் மூலவர் சிறிய லிங்க வடிவில் தாமரை மலரில் காட்சி அருள்கிறார். சுவாமிக்கும் அம்பாளுக்கும் தனித் தனியே விமானங்கள் கொண்டிருக்கும் இத் தலம் அழகிய சிற்ப வேலைப்பாடுகளை கொண்டது. கோயில் சந்நதியில் கொம்பு முளைத்த தேங்காய் ஒன்று உள்ளது. ஆங்கிலேயர் காலத்தில், கேப்டன் துரை என்ற கலெக்டர் ” கோயில் தோப்பு இளநீருக்கு என்ன கொம்பா இருக்கிறது? ” என்று

கேட்டு இளநீர் பறிக்க, பறித்த இளநீர் மூன்று கொம்புகளுடன் இருந்ததாம். அந்த, இளநீர்தான் இன்றும் கோயிலில் தொங்க விடப்பட்டுள்ளது. இந்த முக்கொம்பு தேங்காய், ஒரு கொம்பு ஒடிந்து, தற்போது இரண்டு கொம்புகளுடன் மட்டுமே காட்சித்தருகிறது

குதிரை வாகனத்தில் கிரகங்கள்:

நவகிரகங்களில் சூரியனுக்குரிய வாகனம் குதிரை என்பது நமக்குத் தெரியும். இங்குள்ள நவக்கிரக சந்நிதியில் காட்சிதரும் சூரியன், சந்திரன், குரு பகவான், சுக்கிரன் ஆகிய நான்கு கிரகங்களுமே குதிரை வாகனத்தில் எழுந்தருளியிருப்பது சிறப்பம்சம் ஆகும். சூரியன் ஏழு குதிரைகள் பூட்டிய தேரிலும், குரு பகவானும், சுக்கிர பகவானும் எட்டு குதிரைகள் பூட்டிய தேரிலும், சந்தியா பகவான் பத்து குதிரைகள் பூட்டிய தேரிலும் காட்சியளிக்கின்றனர். இது வேறெங்கும் காணமுடியாத சிறப்பம்சம் ஆகும்.

தென்திருப்பேரை பெயர்க் காரணம்:

சோழ தேசத்தில் திருச்சி அருகில்

குறைவற்ற செல்வமும் பெற்று வாழலாம்.

அழகியபொன்னம்மை:

கிழக்கு நோக்கிய தனி கருவறையில் அழகியபொன்னம்மை ஒரு கரத்தில் மலர் ஏந்தியும், மற்றொரு கரத்தைக் கீழே தொங்கவிட்ட படியும் நின்ற கோலத்தில்

திருப்பேரை என்ற தலம் உள்ளது. அதே போல் தெற்கே பாண்டியநாட்டில் இருந்த இந்தத் தலமான திருப்பேரை "தென்திருப்பேரை" என்று அழைக்கப்பட்டது. இங்கு நவதிருப்பதி ஸ்தலங்களில் மகரநெடுங்குழைக்காதர் திருக்கோவில் அமையப்பெற்றுள்ளது. இந்தக் கோவிலில் உறையும் தாயார் திருப்பேரை நாச்சியார் என்று அழைக்கப்படுகிறார். அவருடைய பெயரால் தென்திருப்பேரை என்று அழைக்கப்படுகிறது என்றும் கூறப்படுகிறது.

சுவாமி கைலாசநாதர்:

கிழக்கு நோக்கிய தனி கருவறையில் சுவாமி கைலாசநாதர் தாமரை வடிவ பீடத்தின் மீது, லிங்கத் திருமேனியராகக் காட்சித் தருகிறார். சரவிளக்கு சுடர்விடும் கருவறைக்குள் பெருமானை கண்குளிர கண்டு வணங்கினால் நோயற்ற வாழ்வும்

காட்சித்தருகிறாள். இந்த அம்மையை வேண்டிக்கொண்டால் விரைவில் திருமணம் கைகூடும் என்பது நம்பிக்கை.

திருக்கோவில் அமைப்பு:

தாமிரபரணி ஆற்றின் தெற்கு கரையோரம் அமையப்பெற்றுள்ள இந்தக் கோவிலுக்குள் நுழையத் தெற்கு வாயிலே பிரதானமாகப் பயன்படுத்தப்படுகிறது. உள்ளே நுழைந்ததும் முதலில் கிழக்கு நோக்கிய தனி சந்நிதியில் அழகியபொன்னம்மை நின்ற கோலத்தில் கம்பீரமாகக் காட்சிதருகிறாள். அதற்கு அடுத்து கிழக்கு நோக்கிய தனி சந்நிதியில்

கைலாசநாதர் காட்சித் தருகிறார். இங்குச் சுவாமிக்கும், அம்பாளுக்கும் தனித்தனி விமானத்துடன் கூடிய தனி சந்நிதி உள்ளது. சுற்று பிரகாரத்தில் நந்தி, விநாயகர், தக்ஷிணாமூர்த்தி, சுப்பிரமணியர், சண்டிகேஸ்வரர், நடராஜர், சிவகாமி அம்மை, பைரவர் ஆகியோர் பரிவார தெய்வங்களாகக் காட்சிதருகிறார்கள்.

திருக்கோவில் சிறப்புக்கள்:

1. கோவிலில் உள்ள சுவர்களில் பல கல்வெட்டுகள் உள்ளன. இந்தக் கல்வெட்டுகள் அனைத்தும் முதலாம் மாற வர்மன் சுந்தர பாண்டியன் காலத்தில் உள்ளவையெனக் கூறப்படுகிறது. இந்தக் கல்வெட்டுகளில் திருப்பேரை கிராமம் ‘சுந்தரபாண்டிய சதுர் வேதி மங்கலம்‘ எனக் குறிப்படப்பட்டுள்ளது.

2. மழைக் கடவுளான வருண பகவான் இங்கு இறைவனை வழிபட்டதால் இந்தத் தலம் வருண ஷேத்திரம் என்றும் அழைக்கப்படுகிறது.

3. இங்குள்ள பைரவருக்கு ஆறு கரங்களுடன் காட்சிதருவது சிறப்பம்சம் ஆகும். சிறப்பு வாய்ந்த இந்தப் பைரவருக்கு தேய்பிறை அஷ்டமி திதியில் பூஜை செய்தால் தொழில் விருத்தி ஆகும் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

4. திருக்கோயிலில் நவகிரகங்கள் அனைவரும் குதிரை வாகனத்தில் காட்சி தருகிறார்கள்

5. மூன்று கொம்புகளுடன் இளநீர் இங்கு கட்டப்பட்டுள்ளது. தற்பொழுது ஒரு கொம்பு உடைந்து இரண்டு கொம்புகளுடன் காட்சி தருகிறது

முக்கிய விழாக்கள்:

இங்குக் கார்த்திகை மாதம் சோமவாரம், புரட்டாசி நவராத்திரி, மார்கழி திருவாதிரை, மாசி சிவராத்திரி ஆகிய வருடாந்திர விழாக்களும், பிரதோஷம், அஷ்டமி வழிபாடு போன்ற மாதாந்திர வழிபாடுகளும் சிறப்பாக நடைபெறுகிறது.

நடைதிறப்பு காலை 7.00 மணி முதல் 10.30 மணி வரை, மாலை 5.00 மணி முதல் இரவு 8.30 மணி வரை.

(தொடரும்)

திவ்ய தேச கவிதை தரிசனம் –29

திருஅரிமேய விண்ணகரம்

அழ. மணிமேகலை,
காரைக்குடி

நுற்றியெட்டு திவ்யதேசங்களுள் இருபத்தியொன்பதாவது திவ்யதேசம், அரிமேய விண்ணகரம். சோழ நாட்டுத் திருப்பதிகளுள், இது இருபத்தியொன்பதாவது திவ்யதேசமாகும். இத்தலம் சீர்காழியில் இருந்து கிழக்கே எட்டு கி. மீ பூம்புகார் செல்லும் வழியில் அமைந்துள்ளது.

திவ்ய தேசங்களில் உள்ள ஆறு விண்ணகரங்களில் இத்தலமும் ஒன்று. ஏனைய ஐந்து விண்ணகரங்கள் பின்வருமாறு

1. திருவிண்ணகரம் – ஒப்பிலியப்பன் கோவில்

2. சீராம விண்ணகரம் – திருக்காழி தாடாளன் கோவில்

3. வைகுந்த விண்ணகரம் – திருநாங்கூர் வைகுந்தநாதன் கோவில்

4. நந்திபுரம் விண்ணகரம் – கும்பகோணம் அருகில் உள்ள நாதன் கோவில்

5. பரமேச்சுர விண்ணகரம் – பரமபதநாதன் கோவில், காஞ்சிபுரம்

விண்ணகரம் என்பது பரமபதத்திற்குச் சமமான தலம். விஷ்ணுவின் கிரகமே விண்ணகரம் ஆயிற்று. இத்தலம் ஹரியாகிய கோவிந்தன் வந்து மேவியிருக்கும் விண்ணகரம். அதனால்தான், இத்தலம் அரிமேய விண்ணகரம் ஆயிற்று. இது திருநாங்கூர் திவ்யதேசமாகும்.

திருநாங்கூரிலும் திருநாங்கூரைச் சுற்றிலும் அமைந்துள்ள பதினொரு திருநாங்கூர் திருப்பதிகளில் ஒன்றான திருக்காவளம்பாடி என்றதலம் குறித்து முன்பதிவில் கண்டுள்ளோம். இத்தலம் திருநாங்கூரில் நாம்

இங்குள்ள எம்பெருமான் பகை நீக்கும் பரந்தாமன். மூலவர் கருவறையில் அமர்ந்தகோலத்தில், தரையில் வெண்ணெய்ப் பானையை வைத்து, அதன்மீது ஒரு காலையும் வைத்துக் கொண்டு குடமாடும் கூத்தனாகக் காட்சி தருகிறார்.

காணப்போகும் இரண்டாவது தலம் ஆகும். கோவர்த்தன மலையைக் குடையாக எடுத்தாடிய ஹரியே இங்கு எழுந்தருளியுள்ளதால், இத்தலம் அரிமேய விண்ணகரம் எனப்படுகின்றது. திருநாங்கூரின் புகழ்பெற்ற கருடசேவைக்கு, இந்தக் கோவர்த்தனகிரியைக் குடையாக்கிய ஹரியும் எழுந்தருள்கிறார்.

இங்குள்ள

மூலவர் – குடமாடுகூத்தன்

தாயார் – அமுதகடவல்லி

உற்சவர் – சதுர்புஜங்களுடன், குன்றைக் குடையாக்கிய கோபாலன்

தீர்த்தம் – கோடித் தீர்த்தம், அம்ருத தீர்த்தம்

விமானம் – உச்சருங்க விமானம்

தலவிருட்சம் – பலாச மரம்

கோலம் – கிழக்கு நோக்கிய அமர்ந்த திருக்கோலம்

உதங்க முனிவருக்குச் சேவை சாதித்தவர் இப்பெருமான். உதங்க முனிவர், பாரதப் போர் முடிந்து துவாரகைக்குச் செலலும் கண்ணனை வழியில் சந்திக்கிறார். கண்ணனிடம் பாரதப்போர் பற்றியும், யார் ஜெயித்தார்? ஏன் ஜெயித்தார்? என்றெல்லாம் கேட்டார். கண்ணனும் எல்லாவற்றையும் சொல்லி, விதிப்படி தர்மம் வென்றது என்று சொல்லி முடித்தார். உதங்கர், அதை ஏற்றுக் கொள்ளவில்லை. “உன் திருவடியே சரணம் என்று சரணடைந்ததால், நீ பாண்டவர்களுக்கு வெற்றியைத் தந்தாய். உன் திருவடியைச் சரணடையாதக் கௌரவர்களுக்கு நீ தோல்வியைத் தந்தாய்” என்று உதங்கர் கூற, உதங்கருக்குப் பதில் சொல்ல வழி யில்லாமல், கிருஷ்ணர் துவாரகைக்கு அவசரமாகச் செல்ல வேண்டுமெனக்

கிளம்பினார். “எப்பொழுதுமே இக்கேள்விகளுக்கெல்லாம் நீ பதில் சொல்லப் போவதில்லை. நீ விருப்பப்பட்டதைச் செய்து முடித்திருக்கிறாய். அர்ஜூனனுக்குக் காட்டிய விஸ்வரூபத் தரிசனத்தை எனக்கும் காட்டு” என்று உதங்கர் வேண்ட, சட்டென்று கிருஷ்ணரும் விசுவரூபத் திருக்கோலத்தைக் காட்டிவிட்டு, குடமாடும் கூத்தனாய், இத்தலத்தில் சேவை சாதிக்கிறார்.

காஷ்யப்ப முனிவருக்கு இரு மனைவியர், கத்ரு மற்றும் வினதை. கத்ரு ஆயிரம் நாகர்களின் தாய். வினதை அருணன் மற்றும் கருடனின் தாய். ஒரு முறை வானத்தில் சென்று கொண்டிருந்த இந்திரனின் உச்சைசரிவஸ் என்னும் குதிரையின் நிறம் குறித்து கத்ரு கேட்டதற்கு, அதன் நிறம் வெண்மை என வினதை கூறினாள். ஆனால், கத்ருவோ அதன் நிறம் கருமை எனக் கூறினாள். குதிரையின் சரியான நிறம் குறித்த போட்டியில் தோற்றவர், வென்றவருக்கு அடிமை என ஒப்பந்தமாயிற்று.

கத்ரு போட்டியில் வெல்வதற்காக, தன் மக்களான ஆயிரக்கணக்கான கருநாகங்களை அழைத்து, உச்சைசரிவஸ் என்னும் இந்திரனின்

தேவலோகக் குதிரையின் உடலைச் சுற்றிக் கொள்ளுங்கள் என ஆணை யிட்டாள். அவ்வாறே, அக்கருநாகங்கள் வெண்குதிரையைச் சுற்றிக் கொள்ள, குதிரை பார்ப்பதற்குக் கருநிறமாக மாறியது. கத்ரு, உடனே வினதையை அழைத்துக் குதிரையைக் காட்ட, வினதையும் குதிரையின் நிறம் கருமை என ஏற்றுக்கொண்டாள். ஒப்பந்தப்படி, தன் குழந்தைகள்

கருடன் மற்றும் அருணனுடன் கத்ருவுக்கு அடிமையானாள்.

கருடன் கத்ருவிடம் தனது தாயையும் தங்களையும் விடுவிக்க வேண்டினார். அதற்கு, "உங்களை விடுவிக்க வேண்டுமென்றால், தேவலோகத் திலிருந்து எங்களுக்கு அமிர்தக்குடம் கொண்டுவந்து தரவேண்டும்" என்று

கத்ரு கூற, உடனே கருடனும் தேவலோகம் சென்று, இந்திரனுடன் போரிட்டு, தேவலோகத்திலிருந்து அமிர்தகலசத்தைக் கொண்டுவந்தார். அவ்வாறு அமிர்தகலசத்துடன் பறந்து வந்த கருடனை விஷ்ணு வழிமறித்து, தேவலோக அமிர்தத்தை நாகங்களுக்குக் கொடுப்பது தர்மமாகாது எனக் கூறி, கருடனுடன் போரிட்டு, கருடனைத் தன் வாகனமாக்கி, அமிர்தக்குடத்தைக் கருடனிடமிருந்து வாங்கித் தலையில் வைத்து ஆடினாராம். அதனால், இத்தலத்துப் பெருமாள் குடமாடு கூத்தன் எனப்பட்டார்.

வேண்டும்?" என்று கேட்டதற்கு, இந்திரன் வருணதெய்வமாக இருப்பதால் விழா எடுப்பதாகக் கூறினர். அதைக் கேட்ட கண்ணன், "நம் கண்முன்னால் உயர்ந்து நிற்கும் கடவுளான இந்தக் கோவர்த்தன கிரியைப் பாருங்கள். நம்

மூலவரின் விக்கிரகம் களிமண்ணிலிருந்து தயாரிக்கப்பட்டுள்ளதால், இங்குள்ள மூலவருக்குத் தைலக்காப்பு மட்டுமே செய்யப்படுகிறது. திருமஞ்சனம் செய்யப் பெறுவதில்லை. மூன்று நிலைக் கோபுரம், கொடிமரம் கிடையாது. பீடம் படி மீது ஏறிச் சென்று வணங்கும்படி இருக்கின்றது.

காப்பியக் கவிஞர் மீனவனார், "திருஅரிமேய விண்ணகரம்" குறித்து எழுதிய ஐந்து பாடல்களும் அவற்றின் விளக்கங்களும் பின்வருமாறு.

1. ஒரு முறை, ஆயர்பாடியில் இந்திரனுக்கு வழிபாடு செய்ய எல்லோரும் தயாராகிக் கொண்டிருந்தனர். அப்போது, கண்ணன் அவர்களை நோக்கி, "இந்திரனுக்கு ஏன் பூஜை செய்ய

கால்நடைச் செல்வங்கள் எல்லாம், இம்மலையின் மீதுதான் மேய்கின்றன. தாகம் தீர்க்கும் ஊற்றுகளும் சுனைகளும் இம்மலையில் நிறைந்து காணப்படுகின்றன. நமக்குத் தேவையான பழங்களும் காய்கறிகளும் இம்மலையில் விளைகின்றன. மழை மேகங்களைக் கூட இம்மலைதான் நமக்குப் பொழிவிக்கின்றது. இம்மலையை விடுத்து, வேறு தெய்வத்தை வணங்க வேண்டியது இல்லை. எனவே, கோவர்த்தன கிரியை வணங்குங்கள்" என்று சொன்னான்.

அதைக் கேட்ட மக்கள் கோவர்த்தனமலையைப் பூஜித்தனர். இதனால் கோபமுற்ற இந்திரன், கடுமையான மழையைப் பெய்வித்து, ஆயர்பாடியே இல்லாமல் செய்ய

வசித்து வந்த ஐந்து தலை நாகமான காளிங்கனை அடக்கி, அதன் தலையில் நர்த்தனம் புரிந்த நாராயணன். அவன் வீற்றிருக்கும் தலமே அரிமேய விண்ணகரமாகும்.

குடமாடு கூத்தன்
குளிர்மழையில்
நிரைகாத்தோன்

படமாடும் அரவணையான்
பவளநிறத் திருவாயான்

நடமாடிக் காளிங்கள்
வலியழித்த நாரணன்தன்

இடமான திருத்தலமே
அரிமேய விண்ணகரம்.

முயன்றார். எல்லோரும் கண்ணனிடம் வந்து சரணடைந்தனர். கண்ணன், கோவர்த்தனமலையைத் தன் பிஞ்சு விரலால் தூக்கிக் குடையாகப் பிடித்தான். அக்குடையின் கீழ் அனைத்து ஜீவராசிகளும் நின்று உயிர் பிழைத்தன. இவ்வாறு குன்றையே குடையாகப் பிடித்தவன், நம் குழலூதும் கோவிந்தன். அவ்வாறு குளிர்மழையிலிருந்து பசுக்கூட்டத்தைக் காத்த எம்பெருமான், இங்கு குடமாடுகூத்தனாக வீற்றிருக்கின்றான். அவன் பாம்பின் மேல் உறங்குபவன். பவளநிற வாயைக் கொண்டவன். யமுனை நதியின்

2. அமுதகடவல்லித் தாயாரின் மணவாளான இப்பெருமானின் பாதங்களை அனைவரும் பணிவர். அவனது திருப்பாதங்களை நாமும் பணிவோம் என்றும், நமது வினைகள் அகலவேண்டுமாயின், இத்தலத்தில் உதித்திருக்கின்ற கருமையான மேகத்தை ஒத்த பெருமானை, பலவகை மலர்களைத் தூவி, நாம் வாழ்த்தி வணங்குவோம்.

அமுதகட வல்லியெனும்
அணங்கின் மணவாளன்

தமதுகழல் பணிவார்கள்
தம்கழலை நாம்பணிவோம்

எமதுவினை அகலவென
இங்குதித்த கருமுகிலை

வகைவகையாய் மலர்தூவி
வாழ்த்தி வணங்குமினே.

3. அரிமேய விண்ணகரமே சிறந்தபதி என்று விரும்பி அமர்ந்திருக்கின்றான் எம்பெருமான். திருநாங்கூரில் அமைந்துள்ள இத்திருத்தலத்தில், அர்ஜுனனுக்குத் தேரோட்டியாக இருந்து பாண்டவர்களைக் காத்தவனும், முதலையின் வாயிலிருந்து யானையைக் காப்பாற்றியவனுமாகிய எம்பெருமான் வீற்றிருக்கின்றான். அத்தகைய எம்பெருமானுடைய பாதங்களைப் பணிந்து வணங்குவோம்.

அரிமேய விண்ணகரம்
அதுபதிஎன்(று) உகந்தானை

திருநாங்கூர் அமைந்துள்ள
திருநகராம் இந்நகரில்

பரிபூட்டுத் தேர்நடத்திப்
பாண்டவரைக் காத்தமுதல்

கரிகாத்தான் உறைகின்றான்
கழல்பணிந்து வணங்குமினே.

4. நான்கு வேதங்களுக்குப் பொருளாகவும், நமக்குத் துணையாகவும், தேவர்களின் குறைகளைக் களைய வாமனனாகவும், மதுராவின் அரசனாகவும், குன்றைக் குடையாக்கிப் பசுக்கூட்டங்களைக் காத்த கோவிந்தனாகவும், பசுக்களின் கோவலனாகவும் விளங்கும் எம்பெருமான் இப்பதியில் அமர்ந்திருக்கின்றவனை நாம் வணங்குவோம்.

நான்மறையின் செம்பொருளாய்
நமக்கென்றும் தனித்துணையாய்

வானமரர் குறைகளைய
வாமனனாய் மதுராவின்

கோனாகிக் குன்றேந்தி
நிரைகாத்த கோவிந்தன்

ஆனிரையின் கோவலனாய்
அமர்ந்தானை வணங்குமினே.

5. அர்ஜனனுக்குத் தேரோட்டியாக இருந்தவனும், நரசிம்மமாய் அவதரித்து இரணியனின் கதையை முடித்தவனும், வில்லினால் இராவணனை அழித்தவனும் ஆகிய எம்பெருமான் அரிமேய விண்ணகரத்தில் அமர்ந்திருக்கின்றான். அவனைப் போற்றுவோம்.

பரிமேய தேர்செலுத்தும்
பார்த்தனுக்குச் சாரதியை

அரிநரனாய் அவதரித்தே
அக்கனகன் கதைமுடித்தோன்

வரிமேய வில்லினால்
அரக்கர்குலம் வீட்டியவன்

அரிமேய விண்ணகரம்
அமர்ந்துள்ளான் போற்றுமினே.

பெரியபுராணக் கதைக் களம்

பகுதி – 12

அன்பர்களே !

தொண்டர்தம் பெருமை அளவிடற்கு அரியது. அவர்களின் அருள் வரலாறு நம்மை நல்வழியில் நடத்தும். திருநெல்லையின் இவ்விதழில் புதுமை இணைப்பாகப் பெரியபுராணத்தில் இடம்பெற்றுள்ள அறுபத்து மூன்று அருந்தொண்டர் கதைகள் ஒவ்வொன்றாகக் காதுகளுக்கும், கண்களுக்கும் மனதிற்கும் இன்பம் சேர்க்கும் வகையில் கதைவடிவில் ஒளிபரப்பாகிறது. கேட்டு, உணர்ந்து அனுபவித்து மகிழுங்கள்.

தென் சபாநாயகர் கோயில் தரிசனம்

உ

26.02.2025அன்று மகா சிவராத்திரியை முன்னிட்டு நான்கு கால வழிபாடுகள் வெகு சிறப்பாக நடைபெற்றன. அருள்மிகு ஆனந்த நடராச மூர்த்திக்கும், அருள்மிகு சிவகாம சுந்தரி அம்மனுக்கும், மாசி மாத சதுர்த்தசி மகா அபிடேகம் 12.03.2025ம் தேதி சிறப்பாக நடைபெற்றது.

பங்குனி மாத வழிபாட்டு நிகழ்ச்சிகள்

17.03.25	சங்கடஹர சதுர்த்தி	மாலை	விநாயகர் வழிபாடு
22.03.25	தேய்பிறை அஷ்டமி	மாலை	வைரவர் வழிபாடு
27.03.25	பிரதோஷம்		
01.04.25	கார்த்திகை	மாலை	ஸ்ரீ ஆறுமுகர் வழிபாடு
05.04.25	வளர்பிறை அஷ்டமி	மாலை	வைரவர் வழிபாடு
08.04.25	வளர்பிறை ஏகாதசி	மாலை	பெருமாள் வழிபாடு
10.04.25	பிரதோஷம்		
11.04.25	பங்குனி உத்திரம்	மாலை	ஸ்ரீ ஆறுமுகர் வழிபாடு
12.04.25	பௌர்ணமி	மாலை	சிவகாமி அம்மன் வழிபாடு

ஒலிப்பேழை

கம்ப வாரிதியின் பக்கம்

திருநெல்லை இதழில் மாதந்தோறும் கம்பவாரிதி இலங்கை திரு ஜெயராஜ் அவர்களிடம் வினாக்களை எழுப்பி அவ்வினாக்களுக்கு விடையை அவர்களின் குரல் வழியாகப் பெற்று திருநெல்லையில் பதிவிடுகிறோம்.

கேள்வி

வினைக்கொள்கை குறித்து முந்தைய இதழில் கேட்கப்பட்ட கேள்விக்கு கம்பவாரிதி அவர்கள் தந்த விளக்கத்தின் தொடர்ச்சி...

விளக்கம்

பயிற்சிப் பேழை

ஞானசம்பந்தர் தேவாரம்

திருநாவுக்கரசர் தேவாரம்

சுந்தரர் தேவாரம்

திருப்புகழ்

கோவிலூர் ஆண்டவர் நூலகம்

கோவிலூரில் அமைக்கப்பெற்றுள்ள ”கோவிலூர் ஆண்டவர் நூலகத்தில்” சுமார் 44,000 க்கும் மேற்பட்ட நூல்கள் உள்ளன. நூல் விவர அட்டவணையைப் பதிவிறக்கம் செய்ய இங்கு சொடுக்கவும்.

கோவிலூர் ஆண்டவர் இணைய நூலகம்



கோவிலூர் ஆண்டவர் நூலகத்தில் உள்ள நூல்கள் அனைத்தையும் கோவிலூர் ஆண்டவர் நூலகம் என்ற இணையதள நூலகத்தில் பதிவேற்றம் செய்து தமிழ்க் கொடையாக அளிக்க முடிவு செய்துள்ளோம்.

தற்போது சுமார் 6469 அரிய நூல்கள் இணைய நூலகத்தில் உள்ளன.

இப்போது நாள் ஒன்றுக்கு சுமார் 3000 பக்கங்களைப் புதிதாக இந்த நூலகத்தில் சேர்த்துக் கொண்டிருக்கிறோம். இந்த நூலகத்தில் உள்ள நூல்களை விலை இல்லாமல் படிக்கலாம்/ பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

இந்த நூலகத்தில் உள்ள நூல்களை விலை இல்லாமல் படிக்க / பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

கோவிலூர் ஆண்டவர் நூலகத்தில் உள்ள (பட்டியலில் காட்டப்பெற்றுள்ள) எந்த நூலாவது உங்களுக்குத் தேவை என்றால் நூலகப் பொறுப்பாளர் திருமதி.சோமசுந்தரி அவர்களைத் (தொலைபேசி எண் 9488124941 என்பதில்) தொடர்பு கொள்ளவும். அந்த நூல் பதிப்புரிமைக்கு அப்பால் இருக்கும் நிலையில் அதை நம் இணைய நூலகத்தில் சேர்த்திட ஆவன செய்கிறோம். தாங்களும் அந்த நூலை உங்கள் வீட்டில் இருந்து இணையவழியாகப் படிக்கலாம். நூல் இணையத்தில் சேர்த்தபின் உங்களுக்குத் தகவல் தெரிவிக்கப்படும். நீங்கள் அந்த நூலை இணைய நூலகத்தில் படித்துக் கொள்ளலாம் அல்லது பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இதற்கு எந்தக் கட்டணமும் இல்லை

இணைய நூலகத்தைப் பயன்படுத்துவோம். இறை தத்துவங்களை அறிவோம்.

முந்தைய இதழ்களை படிக்க அந்தந்த லிங்கை கிளிக் செய்யவும்

திருநெல்லை – புரட்டாசி

திருநெல்லை – ஐப்பசி

திருநெல்லை – கார்த்திகை

திருநெல்லை – மார்கழி

திருநெல்லை – தை

திருநெல்லை – மாசி

திருநெல்லை – பங்குனி

திருநெல்லை – சித்திரை

திருநெல்லை – வைகாசி

திருநெல்லை – ஆனி

திருநெல்லை – ஆடி

திருநெல்லை – ஆவணி

திருநெல்லை – புரட்டாசி

திருநெல்லை – ஐப்பசி

திருநெல்லை– கார்த்திகை

திருநெல்லை– மார்கழி

திருநெல்லை– தை